குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39] ரௌத்திரி ஆண்டு புரட்டாசித்திங்கள் 10—10—80 [இதழ் 1



தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஒன்பதாவது ஆண்டுக் குருபூஜை விழா

31—10—1980 வெள்ளிக்கிழமை

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

இட்டா சனத்தில்
இரவுபக லற்றிடத்தில்
முட்டா திருக்க அருள்
முற்றுந்தா — அட்டாங்க
யோகந்தான் நீங்கி
ஒழியாச் சிவாநந்த
ஆகந்தா சொக்கநாதா.

— சொக்கநாத வெண்பா. 69

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

“ஞானசம்பந்தம்”

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39 | 10-10-80 | இதழ் 11

உட்பொருள்

எண்		பக்கம்
1	பணி செய்யச் சேரவாரும்செகத்தீரே!	481
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	485
3	வினை சுருங்க அருளாய் ...	491
4	அன்னையருள் மாலை	494,518
5	இயற்கை மருத்துவம்	495
6	கடிதம் ...	496
7	திரு அரிசிற்கரைப்புத்தூர், திருச்சிவபுரத் தலச் சிறப்பு ...	497
8	அபிராமி அந்தாதி ...	505
9	திருமணஞ்சேரி ...	511
10	ஆரோக்கியம் ...	515
11	உலகில் எத்தனை நாடுகள் ...	519
12	செய்திகள் ...	521
13	எதிர்காலம் ...	524

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 9.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ 11.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ. 17.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 39 | ரௌத்திரி - புரட்டாசி - 10—10—80 | இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

பணி செய்யச் சேரவாரும் செகத்தீரே!

ஒருமுகப்படுவோம்:

தாய்மொழி, தாய்நாடு, தாய்ச்சமயம் என்ற இம்மூன்றுக்கும் தன்னாலியன்ற அளவு தொண்டுசெய்தல் மக்களாகப்பிறந்த அனைவருக்கும் உரிய கடமைகளாகும். இந்தியத்திருநாடு - சிறப்பாகத் தமிழ்நாடு சமய உணர்வு பூத்துக்குலுங்கும் பெருமை மிக்கது. இங்கே வாழும் அனைவர் நெஞ்சத்திலும் பக்தியும் - சமய ஈடுபாடும் இருந்துவருகிறது. இருந்தபோதிலும் இவற்றை மேலும் வளர்க்கும் நோக்கில் தமிழ் நாட்டில் பல சமய வளர்ச்சி மன்றங்கள் உள்ளன. இவை ஆங்காங்கே செயற்பட்டு இயன்ற அளவு சமயத்திற்கும் சமூகத்திற்கும் பணியாற்றி வருகின்றன. ஆயினும், இவற்றை எல்லாம் ஒருங்கிணைத்து-இவற்றின் பணிகளை ஒருமுகப்படுத்தி முனைப்போடு செயல்பட வைக்கத்தக்க ஒரு பேரமைப்பு இல்லாதது ஓரளவு குறையாகவே இருந்துவந்தது.

அவசரமும் – அவசியமும்

எந்த ஒரு அமைப்போ, திட்டமோ, இயக்கமோ சிறந்தமுறையில் இயங்கி நிலையாகப் பணிசெய்யவேண்டுமானால், தனித்தனி இயங்காமல் ஒருங்கிணைந்து கூட்டுமுயற்சியோடு செயல்படவேண்டியது இன்றியமையாததாகும். கூடிவாழ்ந்தால் கோடிநன்மை என்பதற்கு ஒப்பத் தமிழகத்தைப் பொறுத்தவரை, சமய சமூகப் பணியாற்றிவரும் அமைப்புக்கள் பலவும் ஏதேனும் ஒரு பொது அமைப்பின் கீழ் ஒருங்கிணைந்து செயல்படவேண்டிய அவசரமும் - அவசியமும் ஏற்பட்டிருப்பதை அன்பர்கள் பலரும் தீவிரமாகச் சிந்திக்கலாயினர். இவ்வெண்ணங்களைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுன்னர், பல்வேறு துறையிலுள்ள பல பெரியோர்கள் அவ்வப்போது விண்ணப்பித்துவந்தனர்.

நினைத்ததும் நடந்ததும்

ஏற்கனவே பல்லாண்டுகளாக ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளத்தில் சமய அடிப்படையில், சிறந்த சமூகப் பணிபுரியும் அமைப்பு ஒன்று நிறுவப்படல்வேண்டும் என்ற எண்ணம் உருவாகிக்கொண்டேவந்தது. இச்சந்தர்ப்பத்தில் பக்குவான்மாக்கள் இந்த எண்ணத்தோடு அவர்களை வந்து அணுகியபோது அவர்களது எண்ணம் முதிர்வதாயிற்று.

குருபூஜைப் பெருவிழாவில் நாற்பத்தொன்பது தமிழகச் சமயச் சார்பு மன்ற அன்பர்களும் தனிப்பட்ட பெரியோர்களும் மூன்று நாட்கள் தருமையில் கூடிக் கருத்தரங்கு நடத்தி இவ்வருள் அமைப்பு ஒன்றை நிறுவி, தலைமையேற்று, வழிகாட்டி நடத்தியருளவேண்டுமென ஒருமனதாக ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருமுன்னர் விண்ணப்பித்துக்கொண்டார்கள்.

பணி மன்றம் பிறந்தது !

தருமையாதீனக்குருமுதல்வர் ஸ்ரீகுருஞானசம்பந்தர் குருபூஜைத் திருநாளில் இவ்வெண்ணத்தைத் திருவுளங்கொண்டு ஆய்ந்து, ஆதீனபூஜாமூர்த்தியாகிய செந்தமிழ்ச்சொக்கனின் ஆவணிமூலத்திருநாளில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் புதிய அமைப்புப் பற்றித் திருவாய்மலர்ந்தருளினார்கள். ஆதிகுருமூர்த்திகளின் திருப்பெயர் தாங்கி **ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம் (Sri Guru Gnana Sambandar Mission)** என்ற ஓர் பேரமைப்புத் தோன்றியுள்ளது. இதன் தலைமை அலுவலகம் தருமபுரத்திலிருந்து இயங்கிவரும்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இதன் நிரந்தரத் தலைவராக இருந்துவர இசைந்துள்ளார்கள். அவர்களால் நியமிக்கப்பெறும் ஒரு நிலைக்குழு இம்மன்றத்தின் பணிகளை இயக்கிவரும். சமயநோக்கோடு கூடிய சமூகப் பணிகள் இயற்றுதல் இதன் தலையாய குறிக்கோள். நாடெங்கும் கிளைகளை நிறுவுவதும், முன்னரே இயங்கிவரும் இம்மாதிரியான அமைப்புக்களின் தனித்தன்மைகெடாது அவற்றையும் இணைத்துக்கொண்டு செயற்படுவதும் இதன் தொடக்ககாலப் பணியாக இருந்துவரும்.

தற்போதைக்குக் கீழ்க்காணும் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் இப்பணிமன்றத்தின் செயற்பாடுகள் அமையும்.

ஒன்பது கோட்பாடுகள் :

1. தருமையாதீன முதற்குரவராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தரின் வழிநின்று சமய சமூகப் பணிகளைச் செய்தல்.

2. வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், திருமுறை, சித்தாந்த சாத்திரங்கள் போன்ற சமய, அற, நீதிச் சார்புடைய நூல் கருத்துக்களைப் பரப்புதல்.

3. திருக்கோயில்களையும், திருமடங்களையும் பேணிச் செப்பனிடுதல். திருக்கோயில்களுக்குக் குடமுழுக்குச்செய்வித்தல். திருக்கோயில் இல்லாத இடங்களில் அதனை அமைத்தல். நித்திய நைமித்திக வழிபாடுகள் சரிவர நடைபெறத் துணைபுரிதல். பொது மக்கள் வழிபாட்டிற்கு உரிய வசதிகள் செய்யத் துணைபுரிதல் .சமய சமூக விழாக்களின் வரலாறு, தத்துவங்களைப் பொதுமக்களுக்கு விளக்குதல், விழாக்காலங்களில் அவர்கட்கு வேண்டிய உதவிகள் செய்தல்.

4. சமயக் கருத்துக்களைப் பரப்பும்வகையில் நாள், வார, திங்கள் இதழ்கள், துண்டுப் பிரசுரங்கள், மற்றும் சமய நூல்கள் போன்றவற்றை அச்சிட்டு வழங்குதல்.

5. சமயஉணர்வோடு மாணவ மாணவியர் உருவாகும்வகையில், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், தொழிற்கூடங்கள் முதலியவற்றை நிறுவி நடத்துதல், முன்னரே இயங்கிவரும் இத்தகு நிலையங்கள் மேலும் வளர்ச்சிபெற உதவுதல்.

6. திக்கற்றோர்க்கு அன்பில்லங்கள், நோயுற்றோர்க்கு மருத்துவமனைகள், ஆதரவற்றோர்க்கு விடுதிகள், ஊனமுற்றோர்க்குக் காப்பகங்கள் முதலியன நிறுவிப் பராமரித்தல்.

7. இயல், இசை, நாடகம், சிற்பம், சித்திரம் முதலிய கலைகளிலும், விஞ்ஞானம் மற்றும் தொழிற்கல்வி போன்ற துறைகளிலும் நல்லறிஞர்களை உருவாக்கவும் இத்துறைகளில் ஆய்வுமேற்கொள்ளவும் உதவுதல்.

8. ஸ்ரீ குருஞான சம்பந்தர் பணி மன்றத்தின் கிளைகளை நாடெங்கிலும் நிறுவிச் சமய - சமூகப் பணிகள் செய்தல்.

9. நாடெங்கிலும் தனித்தனியே இயங்கிவரும் இத்தகைய அமைப்புகளின் தனித்தன்மையை மதித்து ஒருசில பொது அடிப்படையில் அவற்றையும் இம்மன்றத்துடன் இணைத்துக்கொண்டு செயற்படுதல்.

தருணமிது:

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம், நமக்காக, நமது சமயத்திற்காக, நாம் செய்யவிரும்பும் இந்து சமூகத்தொண்டுகளுக்கு அடித்தளம் அமைத்துத்தருவதற்காகத் தோன்றியுள்ளது. தமிழ்நாட்டிலும், பிற நாடுகளிலும் வாழும் இந்து சமய உணர்வு படைத்தவர்கள் அனைவருக்கும் இம்மன்றம் சொந்தமானது. பெருமைமிக்க நமது மதத்தை-சிறப்பாகச் சைவ சமயத்தை ஒளிமயமானதாக்க ஒருங்கிணைந்து செயற்படுவதற்கு இது ஓர் அரியதருணம். இவ்வரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி, பணி மன்றம் ஆங்காங்கும் அமைத்துச் சமய - சமூகப் பணியாற்றிச் சிறக்க அனைவரையும் "சேரவாரும் செகத்தீரே" என்று அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு :— ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றத்தின் கிளைகளை அமைக்கவும், இதனோடு இணைந்து செயற்படவும் விரும்பும் அன்பர்கள், கீழ்க்காணும் முகவரியோடு தொடர்புகொள்ள வேண்டுகின்றோம்.

பொதுச் செயலாளர்,
ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம்,
"சாந்தநிலையம்"
தருமபுரம், மாயூரம், 609 001
தமிழ்நாடு.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஆவணிமூல நன்னாளில்

வழங்கியருளிய

ஆசியுரை

21—8—1980

"தாயர் மகவருத்தம் சற்றும் தரியார்கள்
ஆயவினைக் கீடா அமைத்தாலும் — காயம்
பரிக்கும் துயரமெல்லாம் பார்க்கவுனக்கு என்றும்
தரிக்குமோ சொக்கநா தா"

இன்று ஆவணிமூலத்திருநாள். மதுரைச் சொக்கநாதப்பெருமான் மாணிக்கவாசகருக்காக நரிகளைக் குதிரைகளாக்கிக் கொண்டுவந் தருளிய திருநாள். இறைவன் அடியார்களுக்காக நிகழ்த்திய அற்புதத் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று. மணிவாசகர் வரலாற்றில் அவர்பால் வந்தடைந்த இன்னல்கள் பல. அவை, குதிரை வாங்கு வதற்காகக் கொண்டுசென்ற பொருளை இறைபணியில் செலவிட்டமை பற்றி எழுந்த அரசனின் ஆணையால் விளைந்தவை. அவை சிறை யிறுத்தல், சுடுமணலில் இறுத்தல் முதலியனவாம். எனினும் ஈசன் எந்தை இணையடி நீழலிலே நின்ற அவரை அவ்வின்னல்கள் என்ன செய்யக்கூடும்? ஆனால் இன்று பலர், அடியவர் சிறையகப்படவும் சுடுமணலில் நிற்கவும் ஆண்டவன் பார்த்துக்கொண்டு வாளா இருக்கலாமா? என்றும், ஆலயப் பணிக்காக அரசாங்கப் பணத்தைச் செலவிட்ட மணிவாசகருக்கு இவ்வின்னல்கள் வர நியாயம் இருக் கிறதா? என்றும் இவ்வரலாற்றில் ஐயங்களை எழுப்புகின்றனர். ஆண்டவன் ஒரு செயல் செய்தாலும் வாளா இருந்தாலும் அதற்குள் அடங்கியிருக்கும் உள்குறிப்பை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் புலனாகும்.

அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்

நமக்கு வரும் நன்மைக்கும் தீமைக்கும் நாம்தான் காரணம் என்று புறநானூறு கூறுகிறது. "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பது அத்தொடர். "அவரவர் வினைவழி அவரவர் வந்தனர், அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்" என்பது ஆதீனக் குரு முதல்வரின் அருள்வாக்கு. ஆதலின் அனுபவிக்கவேண்டிய வினை இருப்பின் அவ்வினை ஆண்டவன் அருள்வழியே அவர்களை வந்து பற்றவே செய்யும். அங்ஙனம் பற்றுமாறு இறைவனின் கருணையுள்ளம் செயற்படுத்தலாமா? எனின், அது தாயின் பரிவுபோன்றது என்பதனைப் புரிந்துகொள்ளல் தக்கதாகும். இக்கருத்தினை விளக்கமாக இங்கே சிந்திப்போம்.

தாயெனப் போற்றும் தகவுடைச் சான்றோர்

ஆண்டவனை மாணிக்க வாசகரும் பிறரும் பல இடங்களிலும் தாயாக வைத்துப் பாடியுள்ளனர். "தாயும் நீயே தந்தை நீயே" என்பது ஞானசம்பந்தர் வாக்கு. "தாயிற்சிறந்த தயாவான தத்துவனே" என்றும், "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்றும், "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" என்றும் மாணிக்கவாசகர் இறைவனைத் தாயாகப் பாடியருளினர். அப்பர் சுவாமிகளும் "அப்பன் நீ அம்மை நீ" என்றும், "தந்தையும் தாயுமாகி" என்றும் அருளிச்செய்துள்ளார்.

துன்புறுத்தும் செயலில் அன்பிருக்கும் நிலை

ஒருதாய் தன் பிள்ளைகள் தவறுகளைச் செய்யும்பொழுதும் நோயுற்றபொழுதும் அவற்றிற்குரிய தீர்வுகளைச் செய்யத் தவறமாட்டாள். தன் பிள்ளைகள் பிறர் பார்த்துக் குற்றங்கள் சொல்லாத வகையில் நல்லவர்களாக வாழவேண்டும் என்றுதான் ஆசைப்படுவாள். அதற்காக அந்தப் பிள்ளைகளிடத்துத் தவறுகண்டபோது அடித்துத் திருத்துவாள். இதனை வெளிப்படையாகப் பார்க்கும் பிறருக்கு இச்செயல் மிகவும் கருணையற்ற செயலாகவே தோன்றும். ஆனால் அந்தத்தாயின் மனம் எந்த நோக்கத்தோடு இதனைச் செய்கிறது? என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். இக்கருத்தைத்தான் சிவஞானசித்தியாரும்,

"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொலாற்றின்
வந்திடாவிடின் உறுக்கி வளாரினால் அடித்துத்திய
பந்தமும் இடுவர்; எல்லாம் பார்த்திடின் பரிவேயாகும்;
இந்தநீர் முறைமையன்றோ ஈசனார் முனிவும் என்றும்"

என்று கூறுகிறது. இதேபோன்று தன் பிள்ளைகளுக்கு ஏதேனும் கட்டியோ சிரங்கோ வந்திடின் பார்த்துக்கொண்டு சும்மா இருந்துவிட மாட்டாள். அந்தக்குழந்தை மணற்பகுதியில் விளையாடுகிறபோதும் பிறநேரங்களிலும் பன்முறையும் 'இந்த மணலில் விளையாடாதே' " அந்தத் தின்பண்டங்களைத் தின்னாதே" என்று எச்சரித்திருந்தும் கேளாத அக்குழந்தை இப்பொழுது கட்டியும் சிரங்கும் வந்து துன்புறும்பொழுது, துன்புறட்டும் என்று விட்டுவிடமாட்டாள். அதனைத் தூக்கிச்சென்று மருத்துவரிடம் காண்பித்து வாளால் அறுத்து மருந்திட்டுக் குணப்படுத்த முயற்சி செய்வாள். அங்ஙனம் செய்யும்பொழுது அக்குழந்தை படுகிறவேதனையைப்பார்க்க அவளால்சகித்துக்கொள்ள முடியாது. எனினும் தற்காலிகமான இத்துன்பத்தினால் நிரந்தரமான இன்பம் கிடைக்குமே என்று எண்ணி ஆறுதல் கொள்கிறாள். இது உலகியலில் காணும் நிலை. அதுபோலவே ஆண்டவனும் உயிர்களாகிய குழந்தைகள்படும் துன்பங்கள் அவற்றின் ஆன்ம வளர்ச்சிக்குத் தேவை எனக்கருதி வினைக்கேற்பத் துன்பங்களைத் தருகிறான். துன்பங்கள் தருவதனாலேயே ஒருவர்மீது வெறுப்புக் கொள்ளுதல் கூடாது. சிரிக்கச் சிரிக்கப் பழகுபவர்களைவிட அழ அழச் சொல்லுபவர்கள் எவ்வளவோ மேலானவர்கள் என்று உலகியலிலும் கூறுவதைக் காணலாம்.

சேயின் வேதனையைத் தாயும் தாங்குவாளா?

ஆதீனக் குருமுதல்வரும், ஆண்டவனைத் தாயின் நிலையில் வைத்து ஒரு பாடலை அருளிச்செய்கிறார். 'இறைவா! உயிர்கள் படும் துன்பங்கள் அவற்றின் வினைக்கு ஈடாகத்தான் வருகின்றன என்றாலும் அவ்வுயிர் துன்புறும்பொழுது, தாயின் கருணையுள்ளம் கொண்ட உனக்குத் தாங்கிக்கொள்ள இயலுமா? என்று கேள்வி நிலையில் வைத்து ஒரு பாடல் அருளிச்செய்கிறார். அப்பாடல்தான் தொடக்கத்தில் சிந்திக்கப்பெற்றது.

இங்கே இன்னொரு கேள்வியும் எழுகின்றது. அங்ஙனம் வினை வழியே உயிர்கள் துன்பத்தை அனுபவித்துத்தான் தீரவேண்டும் எனின், ஆண்டவனின் அருள்துணை எதற்கு? என்ற கேள்விக்கும் விடை சொல்லியாக வேண்டும். குழந்தை துன்புறும்பொழுது, தன் தாய் அருகிலிருக்கின்றாள் என்ற உணர்வினால் அதன் உடல் வலியைத்தாங்கிக்கொள்ளும் மனவலிமையை அக்குழந்தை பெறுதல் போலவே, துன்பங்கள் வந்தடைந்தபொழுது ஆண்டவனின் அருட்கவசம் தங்களைக் காப்பாற்றும் என்னும் பக்தியுணர்வுடையவர்கள் அத்துன்பங்களைத்தாங்கும் சக்தியையும் ஆறுதலையும் பெற்று இன்புறுகிறார்கள் மேலும் நாம் செய்த வினைகளுக்கு ஈடாகத்தான் இறைவன் நமக்குத் துன்பத்தை அருளித் திருத்துகிறான் என்ற உண்மையை

உணர்ந்தவர்களுக்குத் துன்பம் துன்பமாகத் தோன்றுது. மாருக இன்பமாகவே தோன்றும். "பிணி அறியோம் எந்நாளும் இன்பமே; துன்பமில்லை" என்ற அப்பர் வாக்கு இதனை நன்கு தெளிவிக்கிறது. எனவே இறை செயல் முறை என்பதை உணரலாம்.

வினை என்பதற்குச் செயல் என்பது பொருளாகும். ஆதலின், ஒருவர் செய்த செயல்களுக்கேற்ப ஆண்டவன் இன்பத் துன்பங்களைக் கூட்டுவித்தருளுகின்ருன் என்று உணர்ந்துகொண்டு இறைவனை எந்நேரமும் எந்நிலையிலும் வணங்கி இன்புறுதலே செய்யத்தக்கதாகும்.

ஆண்டவனின் அருட்செயல்கள் அனைத்தும் நன்மைக்கே!

இங்ஙனம் சிந்தித்த பல்வேறு கருத்துக்களினுல் மணிவாசகரை அடைந்த இன்னல்கள் அவரின் வினைவழி அருளப்பட்டன எனினும் இறைவன் தாயின் உள்ளார்ந்தபரிவு நிலையிலிருந்து அத்துன்பங்களைத் தாங்கிக்கொண்டு அவரை இன்பநிலையிலேயே இருக்கச்செய்தான் என்றும், அது அவன்கருணையையே காட்டுகிறது என்றும் உணர்தல் தக்கதாகும். ஆண்டவன் நமக்குத் துன்பத்தைத் தரமாட்டான்; தருவானேயானுல் அது நம நன்மைக்குத்தான் என்று ஏற்று வாழ்வதும் அதன்வழி உய்தி பெறுவதுமே இன்றைய விழாவின் சிந்தனையாகக் கொள்ள வேண்டும்.

பாராட்டுப் பெறுகின்ற பண்புடையார்:

சொக்கநாதப்பெருமானை ஆன்மார்த்த மூர்த்தியாகக் கொண்டு பன்னெடுங்காலமாகச் சிவநெறிப்பரிபாலனமும் செந்தமிழ்ப்பரிபாலனமும் செய்துவரும் தருமை ஆதீனம், அப்பெருமானுக்குகந்த திருநாளாகிய இந்த ஆவணிமூலத்திருநாளை ஆண்டுதோறும் மிகச் சிறப்பாகக் கொண்டாடிவருகிறது. இந்நன்னுளில் கயிலைக்குருமணி அவர்கள் தத்துவம், விஞ்ஞானம், பொருளாதாரம், மொழியியல் ஏதேனும் ஒன்றில் புலமை வாய்த்த ஒருவரைப் பாராட்டிப் பட்டம் கொடுப்பது என்பதனைக் கடந்தபல ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வந்தமையையொட்டி இவ்வாண்டும் திருச்சியில் வாழ்பவரும் நாடறிந்த நல்லவருமான திரு கி ஆ. பெ விசுவநாதம் அவர்களைப் பாராட்டிச் சொக்கநாதப் பெருமான் சந்நிதியில் ஆசிக்கவசமாசப் பொன்னுடை போர்த்திச் 'செந்தமிழ்க்காவலர்' எனும் பட்டம் வழங்கப்பெற்றது. இவரின் தொழில் வாணிகம். எனினும் சைவமும் தமிழும் தழைக்கச் சுமார் அறுபது ஆண்டுகளாக இடையருது பாடுபட்டுவருபவர். இவருக்கு 'முத்தமிழ்க் காவலர்' எனும் பட்டம் முன்னமேயே இருக்கிறது. செந்தமிழுக்கு இரண்டு சிறப்புகள் உள்ளன. ஒன்று, அகம், புறம் எனும் பகுப்பு; பிறிதொன்று இயல்,

இசை, நாடகம் எனும் பிரிவுகள். இயல், இசை, நாடகம் எனும் மூன்றையும் அமைத்து முத்தமிழ்க்காவலர் எனும் பட்டம் முன்னரே அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவற்றினையும் அகம், புறம் எனும் இரண்டையும் சேர்த்துத் தொகுப்பாக முழுமையும் தழுவுவதாகச் 'செந்தமிழ்க்காவலர்' எனும் பட்டம் இன்று அளிக்கப் பெற்றது.

தமிழை வளர்க்கும் தகவுடையார்:

முன்பெல்லாம் மன்னர்கள் தமிழ்ச்சங்கம் வைத்துத் தமிழ் மொழியை வளர்த்து வந்தனர். இந்த நூற்றுண்டில் இவர் திருச்சியில் தமிழ்ச்சங்கம் அமைத்துத் தமிழ்ப்பணி செய்துவருகிறார். மூன்பு சென்னையில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டில், மிகுந்த பொறுப்பில் இருந்து செயலாற்றிப் பலரின் பாராட்டுக்களைப்பெற்றவர். 'தமிழகப் புலவர் குழு' எனும் அமைப்பு ஒன்றை வைத்து நாடுமுழுவதும் சென்று நல்ல பணியாற்றி வருபவர் மேலும் வாலையானந்த அடிகளிடம் சமய விசேட நிர்வாண தீட்சைகள் பெற்று, சமயத் தொண்டும் செய்துவருபவர். இப்படிப் பல பணிகளை நாடெங்கிலும் செய்துவரும் திருவாளர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து மக்களுக்கும் சமயத்திற்கும் மொழிக்கும் தொண்டு செய்வாராக!

அமைதியைக் காண அமைப்போம் பணி மன்றம்;

இன்று நாடு பல்துறைகளிலும் முன்னேறியிருந்தாலும் மக்களின் மனத்தில் அமைதியும் மகிழ்வும் இல்லாமல் துன்புறுகின்ற நிலையினை அன்றாடம் செய்தித்தாள்கள் மூலமாகவும் பிறவற்றாலும் அறிகிறோம். இதற்கு அடிப்படைக்காரணம் சமயநம்பிக்கையும், தெளிவும், நடைமுறையும் வரவரக் குறைந்துகொண்டு வருவதும், மாறுகப் போலி நாகரிகமும் புரட்சி மனப்பான்மையும் வளர்ந்துகொண்டு வருவதும் தான் என்பதனை அனைவரும் இப்போது உணரத்தலைப்பட்டுள்ளனர். இதற்குள்ள அடிப்படை நிலையினைச் சிந்தித்துப் பார்த்தால் தமிழகத்தில் ஆங்காங்கே சமயப்பணி செய்யும் மன்றங்கள் சிதறிக் கிடப்பதும் பணிகள் பலவும் பொது மக்களின் நல்வாழ்வுக்குச் சென்று சேராமையும்தான் காரணங்கள் என்பதனை உணரலாம்.

இக்கருத்துக்களைப்பற்றி ஆராய்ந்து ஒருநல்ல முடிவு எடுப்பதற்காக நமது ஆதிபரமாசாரியரின் குருபூஜைத்திருநாளில் தமிழகத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த 49 சமய மன்றங்களைச் சார்ந்தோரும் பிறரும் கலந்து கொண்ட கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. அதன் நிறைவில் அனைத்துச் சமய மன்றங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புகொள்ளவும் பணிகளைச் சிந்தித்துத் தேவையான

நிலையில் பொதுமக்களுக்குப் பணிசெய்வதற்கும் ஒருபேரமைப்பு வேண்டும் என்றும், அதற்கு நாமே தலைமை ஏற்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். குருமுதல்வரின் வழிநின்று அனைத்துப் பணிகளையும் செய்தலே தக்கதெனக்கருதி ஆதிபரமாசாரியரின் திருப்பெயரையே அப்பேரமைப்புக்குரியபெயராக அமைத்து **ஸ்ரீ குருஞான சம்பந்தர் பணி மன்றம்** எனும் பேரமைப்பு ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கநாதப்பெருமானுக்குகந்த திருநாளாகிய இந்த ஆவணி மூல நன்னாளில் தொடங்கப்பெறுகிறது. ஆண்டவனே அடியவருக்காக நரியைப்பரியாக்கிக் குதிரைச்சேவகனாகவும், பொன்மேனி நலிய மண்கூடை சுமந்து கூலி ஆளாகவும் வந்தருளிய இந்நாளில் மக்களுக்குப் பணியாற்ற ஒருபேரமைப்புத் தொடங்கப்பெறுவதும் பொருத்தமாகவே உள்ளது. இவ்விழாவில் சமயப் பணியும் சமுதாயப் பணியும் அமைந்திருப்பது சுபசூசகமாகவே தோன்றுகிறது.

இப்பேரவை சமயம், சமுதாயம், கல்வி, மருத்துவம் போன்ற பணிகளை ஆங்காங்கே உள்ள கிளைகளின் துணையுடன் செய்து வரும். சமுதாயப்பணியுடன் கூடிய சமயப்பணியைச்செய்வதற்காகத் தொடங்கியுள்ள இப்பேரமைப்புடன் ஆங்காங்கே பணிகள் பலவும் செய்து முன்னமே இயங்கிவரும் மன்றங்கள் இணைந்தும், சமயப்பணியையும் சமுதாயப்பணியையும் செய்யவேண்டும் என்னும் விருப்பமுடையவர்கள் ஆங்காங்கே புதிதாகப் பணிமன்றங்களைத் துவக்கி இப்பேரமைப்புடன் இணைந்தும் அதன்வழி மக்களுக்குத் தொண்டாற்றி மனவளமும் ஆன்மபலமும் கொண்டு வாழ்வார்களாக!

அடுத்து ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா, சொக்கநாதப்பெருமானுக்குகந்த நாளாகிய இந்த ஆவணிமூல நாளிலேயே ஆண்டுதோறும் நடைபெற்றுவருகிறது. இந்நாளில் தக்கார் ஒருவரால் இந்நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கச் செய்வது வழக்கம். அந்த வழக்கப்படி இன்று திருவாளர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பல்வேறு நல்லறக் கருத்துக்களை மாணவர்களுக்கு அறிவுரைகளாக வழங்க இருக்கின்றார்கள்.

இன்றைய நாளில் பாராட்டுப்பெறும் நம் செந்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும், மற்றும் விழாவில் பங்கேற்கும் பிறரும், ஆதீனக் கல்விநிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்களும், பயிலும் மாணவர்களும் நலம்பல பெற்று நீடுவாழச் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க சமய சமூகத்தொண்டு

வளர்க பணி மன்றங்கள்

வினை சுருங்க அருளாய்

செந்தமிழ்ச்செல்வர்,

திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.

இறைவன் திருத்தில்லையில் நடராஜப்பெருமானாகக் காட்சி அளிக்கிறான். மூவாயிரம் அந்தணர்கள், என்றும் அவனைப் பூஜை பண்ணி வழிபட்டார்கள். அவர்கள் என்றும் பிரியாமல் அவனை வழிபட்டார்கள். தில்லைவாழ் அந்தணர்கள் அந்தப் பெருமானுக்கு அபிடேகம் செய்து அர்ச்சனை புரிவார்கள். பசுமாட்டிலிருந்து கிடைக்கும் நெய்யும் பாலும் தயிரும் அபிடேகத்திரவியங்கள். அந்தணர்கள் அவற்றால் அபிடேகம் செய்ய அவற்றை அவன் ஏற்று ஆடினான்.

ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர்

அந்தணர்கள் பிரியாமல் ஒன்றுபட்டு இறைவனுடைய வழிபாடே தம்முடைய வாழ்க்கையில் தொழிலாகவும் இன்பம் தரும் செயலாகவும் கொண்டு வாழ்ந்தார்கள். அந்தச் சிற்றம்பலத்தை நாடி இறைவன் நித்தியவாசம் செய்கிறான்.

அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாய் இடமா

தனக்கு உரிய இடமாகச் சிற்றம்பலத்தை நாடிவந்து ஆடும் எம்பெருமான், வேறு யாரும் அணியாத கொன்றை மலரைத் தன்னுடைய அடையாள மாலையாகவும் கண்ணியாகவும் புனைந்திருக்கிறான். அதற்கு மென்மையான மணம் உண்டு.

நறுங்கொன்றை நயந்தவனே!

இறைவன் எப்போதும் வேதத்தைப் பாடிக்கொண்டிருக்கிறான். வேதம் அநாதி; அந்தம் இல்லாதது. வேறு யாரையேனும்மட்டும் சார்ந்து அது இருந்தால் அவர்கள் ஒருகாலத்தில் அழியும்போது அதுவும் மறைந்துபோகும். ஆனால் சாவா மூவாப் பேராளனாகிய இறைவன் அதைப் பாடுவதனால் அது என்றும் நித்தியமாக இருக்கிறது. மறையோடு வேறுபல பாடல்களையும் இறைவன் பாடுகிறான்.

பாடினாய் மறையோடு பல்கீதமும்

வேதகானத்தோடு மற்றப்பாடல்களையும் பாடியதாகத் திருஞான சம்பந்தர் சொல்கிறார். இசையே இறைவனுடைய வடிவந்தான். அவன் முதலில் எழுப்பும் இசையே பிறகு உலகத்தில் வளர்ந்து வருகிறது. பலவகையான கீதங்களும் அவனிடத்திலிருந்து பிறந்தன.

இறைவன் தன் சடையில் வெண்திங்களை அணிந்திருக்கிறான். பல சடைகள் அவன் திருமுடியில் உள்ளன. அங்கே புனைந்துள்ள திங்கள் பிறை. பூரணசந்திரனுக்குத்தான் மறு உண்டு பிறைச் சந்திரனில் மறு இல்லை. ஆதலின் அது முழுவெண்மையாகத் தோன்றுகிறது; என்றும் ஒருபடித்தாகநின்று நிலாவை வீசுகிறது.

வெண்திங்கள் சூடினாய்.

அந்தத் திங்கள் பனியை வெளிப்படுத்துகிறது. கதிர்களுடன் விளங்குகிறது. பனியை உண்டாக்குவதனால் அதற்கு ஹிமகரன் என்ற பெயர் அமைந்தது. பனியைக் காலும் கதிர் வெண்டிங்களை இறைவன் சூடியிருக்கிறான். தன்னை அடைந்தவர்கள் தேய்வும் வளர்ச்சியும் இல்லாமல் வாழ்வார்கள் என்பதை அந்தத் திங்கள் காட்டிக்கொண்டு விளங்குகிறது.

பனிகாய் கதிர் வெண்திங்கள்
சூடினாய்!

திங்களுக்குத் தக்கன் சாபம் உண்டாயிற்று. இருபத்தேழு நட்சத்திரங்களுக்கு நாயகனாகிய அவன் ரோகிணியிடம் தனியன்பு வைத்து ஒழுகினான். அதுகண்டு தக்கனுக்குக் கோபம் உண்டாயிற்று. "நீ தேய்ந்து மாய்ந்து வளர்ந்து அல்லல் படுவாயாக!" என்று சபித்தான். அவனுக்குவந்த விபத்தை நீக்கும்பொருட்டு இறைவன் அவனைத் தன் திருமுடியில் அணிந்துகொண்டான். அவன் திருமுடியில் இருப்பதனால் திங்களுக்குச் சிறந்த பாதுகாப்புக் கிடைத்தது. வானத்தில்தோன்றும் திங்கள் தேய்வதும் வளர்வதுமாக இருந்தாலும் இறைவன் திருமுடியைச் சார்ந்த திங்கள் அந்த இரண்டும் இல்லாமல் விளங்குகிறது. தக்கனின் சாபம் அதை ஒன்றும் செய்ய இயலவில்லை.

இறைவனைச் சாராத வரையில் நாம் வினைகளினால் துன்புறுவோம். இறந்தும் பிறந்தும் அல்லற்படுவோம். வினைகள் உள்ள வரையில் பிறப்பு உண்டு. பலகாலமாக வினைகள் நம்மைத் தொடர்ந்து வருகின்றன. நம்முடைய கணக்கில் பெரிய வினைமூட்டை ஒன்று இருக்கிறது. அதற்குச் சஞ்சிதம் என்று பெயர். அதில் ஒரு பகுதியை

இந்தப் பிறவியில் அனுபவித்துக் கழிப்பதற்காகப் பிறக்கிறோம். ஒரு பக்கம் அந்த வினைகளை அனுபவித்துக் கழிக்கும்போதே புதிய வினைகளைச் செய்கிறோம். இந்தப் பிறவியில் அனுபவிக்க அமைந்த வினைக்குப் பிராரப்தம் என்றுபெயர். இவ்வாறு தொடர்ந்து வினைகளை ஈட்டிக்கொண்டே போவதனால் நம்முடைய பிறப்புக்கு முடிவே இருப்பதில்லை.

வினைகள் இல்லாமல் போகுமானால் பிறப்பினின்றும் விடுதலை பெறுவோம். இந்தத் தொல்வினைகள் போகவேண்டுமானால் இறைவனுடைய திருவருள் துணைநிற்கவேண்டும். அவன் அருளைப் பெற்ற பெரியோர்கள் பிராரப்தத்தை அனுபவிப்பார்கள். அவை வரவரச் சுருங்கும். புதிய வினைகளை ஈட்டமாட்டார்கள்

திருஞானசம்பந்தர் இறைவனை வேண்டுகிறார்; "எம்பெருமானே! என்னுடைய வினைகள் சுருங்கத் திருவருள் பாலிக்கவேண்டும்" என்று விண்ணப்பம் செய்கிறார்.

அருளாய் சுருங்க எம் தொல்வினையே

அனுபவித்துக் கழிக்கக் கழிக்க வினை சுருங்கிவிடும் ஆனால் இறைவன் திருவருள் நாட்டம் இல்லாதவர்களுக்குப் புதிய வினைகள் சேர்ந்து பெருகிவிடும். அந்தநிலை வாராமல், பழைய வினைகளை அனுபவித்து அவை வரவரக் குறையும்படி செய்வார்கள் அன்பர்கள். அப்படி அனுபவிக்கும்போது இறைவனுடைய அருட்கவசத்தைப் பெற்றிருப்பதனால் அவ்வினைகளின் உறைப்பு குறைந்து சுருங்கிவிடும். கம்பளியைப் போர்த்துக்கொண்டவனுக்குக் குளிரினது துன்பம் அவனளவில் குறைந்து விடுவது போலத் தொல்வினைகளின் உறைப்புக் குறைந்துவிடும். அதனால் அந்த அருட் கவசம் வேண்டுமென்று இறைவனிடம் வேண்டிக்கொள்கிறார் சம்பந்தப்பெருமான்.

ஆடி னாய்நறு நெய்யொடு பால் தயிர்
அந்த ணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடி னாயிடமா; நறுங் கொன்றை நயந்தவனே!
பாடி னாய்மறை யோடுபல் கீதமும்;
பல்ச டைப்பனி காய்கதிர் வெண்திங்கள்
சூடி னாய்! அரு ளாய், சுருங்கஎம் தொல்வினையே.

தில்லை மூவாயிரவராகிய அந்தணர் பிரியாமல் நாள்தோறும் வழிபடும் திருச்சிற்றம்பலத்தை விரும்பி இடமாகக் கொண்ட பெருமானே! அவர்கள் அபிடேகம் செய்யும் மணம் பொருந்திய நெய்யோடு பாலும் தயிரும் ஆடினாய்; மணம் வீசும் கொன்றை மலரை விரும்பிக் கண்ணியாகவும், மாலையாகவும் கொண்டவனே! வேதத்தோடு வேறு பலவாகிய கீதங்களையும் பாடினவனே!

பல சடைகளினூடே பனியை வெளியிடும் கதிர்களோடு கூடிய வெண்மையான பிறைச் சந்திரனைச் சூடினவனே! எம்பிறவிக்குக் காரணமான பழவினைகளைச் சுருங்கி இல்லையாகும்படி திருவருள் பாலிக்கவேண்டும்.

[ஆடினாய் - அபிடேகம் செய்து கொண்டாய். நறு நெய் - அப்போதே கடைந்து வெண்ணெய் எடுத்து அப்போதே உருக்கிய நெய். நெய்யோடுசேர்ந்த பாலிலும் தயிரிலும் ஆடினாய் அந்தணர் - தில்லை மூவாயிரவர். சிற்றம்பலம் – தில்லைத்தலத்தில் இறைவன் எழுந்தருளியிருக்கும் கனகசபை. நயந்தவனே - மிகவும் விரும்பிப் புனைந்தவனே. பல்சடை - பலசடைகள். பனி கால் – பனியை வெளிப் படுத்தும்; பனி - குளிர்ச்சியுமாம். வெண்திங்கள் - பிறை. சூடினாய் - திருமுடியில் அணிந்தாய். எம் தொல் வினை சுருங்க அருளாய்; "பழவினைகள் பாறும்வண்ணம்... எனை ஆண்ட அத்தன்" என்பது திருவாசகம். எம் - என்றது பிற அடியார்களையும் உளப்படுத்தி. ஏகாரம், ஈற்றசை]

இந்தத் திருப்பாட்டு 3 - ஆம் திருமுறையில் உள்ளது.

அன்னை அருள்மாலை

திருமுறைக்கலாநிதி,

வேலூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

அரிபிரமர் காணாத அரனுறை கோகரணம்
அமருங்கோ கர்ண அம்மை
அழுகொழுகு செஞ்சடையன் மகிழ்பருப் பதமக
லாப்பருப் பதநாயகி
திருஇந்திர நீல பருப்பதம் நாளும்நாம்
சேவிக்கும் நீலாம்பிகை
சிந்தையி லுறைந்திடும் அனேகதங் காபதம்
திகழ்மனோன் மணியம்மையே
கரிமுகன் கந்தன் தந்தைமகிழ் கேதாரம்
காக்கும்கே தாரகௌரி
காதலித் தேத்துவார்க் கருள்திருக் கயிலாயம்
கைதொழும் பார்வதியம்மை
பரிவாக வேநாளும் பணிவார்க் கருள்பாவை
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற் கருள் அன்னையே. (86)

இயற்கை மருத்துவம்

திரு. கெ. கி. சத்தியநாராயணன்
கோயம்புத்தூர்

விநாயக வழிபாட்டில் முக்கிய இடம் வகிக்கும் அறுகம்புல் இயற்கை மருத்துவத்திலும் சிறப்பிடம் பெற்றுத்திகழ்கிறது.

அறுகம்புல் சாறு குணப்படுத்தும் பலநோய்களில் ஒருசில.

1. நரம்புத் தளர்ச்சியையும், உடல் தளர்ச்சியையும் போக்கி உடலை வலுப்படுத்துகிறது.

2. உடலிலுள்ள நச்சுத் தன்மைகளை நீக்குகிறது

3. இரத்தத்தைச் சுத்தம் செய்கிறது.

4. பல் நோய்களை முற்றிலும் குணப்படுத்துகிறது.

5. நீண்டகால தலைவலியைப் போக்குகிறது.

6. மாதவிடாய் தொடர்பான தொல்லைகளை ஓரளவு குணப் படுத்துகிறது.

சாறு தயாரிக்கும் முறை :- ஒருவருக்குத் தேவையான ஒரு கைப்பிடிபுல் (வேரின்றி) எடுத்துக் கழுவிய பின், சிறிது நீர்விட்டு ஆட்டாங்கல்லில் போட்டு ஆட்டினால் கிடைக்கும் சாறுடன் (4) நான்குமடங்கு நீர் கலந்து வடிகட்டி எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தச் சாற்றைக் காலையில் வெறும்வயிற்றில் ஒரு டம்ளர் சாப்பிட வேண்டும். (காபி சாப்பிடுவதுபோல மெதுவாக) சாப்பிட்ட மூன்று மணிநேரம் வரை வேறு எதுவும் சாப்பிடவோ அருந்தவோ (நீர்தவிர) கூடாது.

சகலகலாவல்லி மாலை

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காய்;எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங் காலும்அன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே!

— ஸ்ரீகுமரகுருபரர்.

திரு. அண்ணு சுப்ரமணியன்

தலைவர், இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம்
மைலாப்பூர், சென்னை 600 004

** முத்துகுமாரஸ்வாமியின் கிருத்திகை அபிஷேகத்தையும் அர்ச்சனையையும் கண்டனுபவிக்கும் பாக்கியம் முதல் தடவையாகத் தங்கள் அருளால் இப்போது கிட்டிற்று அதை என்றும் மறக்க மாட்டேன். ஆதீனத்தில் காலை பூஜையும் மிக அமையான சூழ்நிலையில் மனத்தைக் கவர்வதாக இருந்தது. எங்கும் சிறிதுகூட அழுக்கில்லாமல் சிவனடியார்களுடைய உள்ளம்போல் வெளியிலும் பரிசுத்தமாக இருந்தது மனத்தில் ஆழப்பதிந்தது. கோயிலிலும் மடத்திலும் பூஜைமுறைகளும் ஒழுங்குகளும், மற்ற எல்லா ஆலயங்களிலும் அப்படி ஏற்பட வேண்டும் என்ற அவாவை உண்டாக்கின.

தங்களையண்டித் தெய்வப் பணிபுரிபவர்கள் இறைபணியுடன் மக்களின் சேவையையும் அதற்குதவியாகக் கருதி அதற்காக ஒரு மன்றத்தை நிறுவவேண்டும் என்று ஊக்கம் கொண்டிருப்பது இறைவனருளால் விரைவில் தழைத்தோங்குவதை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்போம்.

'அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால், இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே' என்று தாயுமானுர் கூறியது செயலில் தருமை ஆதீனத்தில் முழுதும் மெய்யாக எல்லோரும் காண வேண்டும். அதற்குத் தகுதியான பல முதியவர்களும் இளைஞர்களும் ஒத்துழைக்க ஆண்டவன் அனுப்பிவைக்க வேண்டும். துறவிவேடமில்லாமலேயே துறவிகள் காட்டும்வழியில் பணிபுரியக் கூடியவர்கள் இப்போது நமது நாட்டிற்குத்தேவை. **

சகலகலாவல்லிமாலை

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும்என்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்; படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடிஉண் டேனும் விளம்பில்உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ? சகல கலாவல்லியே!

ஸ்ரீ குமரகுருபரர்.

திரு அரிசிற்கரைப்புத்தூர், திருச்சிவபுரத் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம், ஏ.,

"பூந்தண் பொன்னி எந்நாளும் பொய்யாதளிக்கும் புனல் நாடு". என்று புலவர்களால் போற்றிப் புகழப்பெறுவது சோழவள நாடு. இந் நாட்டில் காவிரியின் இருகரைகளை அடுத்து விளங்கும் தேவாரப் பாடல்பெற்ற சிவதலங்கள் 190. திரு அரிசிற்கரைப்புத்தூரும், திருச் சிவபுரமும் காவிரித் தென்கரைத்தலங்களில் 66, 67 ஆவது தலங் களாகத் திகழ்வன. புராணவரலாற்றுச் சிறப்புக்கள் பலவும் உடை யனவாய் விளங்கும் இவ்விரு திருக்கோயில்களும் அப்பர்சுவாமிகள் திருத்தாண்டகத் திருப்பதிகத்தில் இணைத்துப் பாடப்பெற்றுள்ளன. "முனிவர்க்கும் வானவர்க்கும் முதலாய்நின்ற அத்தன்காண், புத்தூரில் அமர்ந்தான் தான்காண், அரிசிற்பெருந்துறையே ஆட்சிகொண்ட சித்தன்காண்...........சிவபுரத்து எம் செல்வன்தானே" என்பது அப்பர் தேவாரம்.

1. திருஅரிசிற்கரைப்புத்தூர்

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டத்தில் அளகாபுத்தூர் என வழங்கப்படுகின்றது இத்தலம். நாச்சியார் கோவிலுக்கு அருகில் உள்ளது. அழகார்புத்தூர் என்று வரும் தேவாரத் தொடரை மக்கள் அளகாபுத்தூர் எனத் திரித்து வழங்குகின்றனர். "அலைக்கும் புனல் சேர் அரிசில் தென்கரை அழகார் திருப்புத்தூர் அழகன் நீரே"என்பது இத்தலத் தேவாரத்தொடராகும். பெரியபுராணத்தில் இத்தலம் செரு விலிபுத்தூர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இத்தலம் கும்பகோணத்துக்குத் தென்கிழக்கே 7 கி.மீ. தூரத்தில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து நாச்சியார்கோயில் வழியாகச் செல்லும் பேருந்துகளில் சென்றால் இத்தலத்தை அடையலாம். அருகில் திருநறையூர்ச்சித்தீச்சரம், சிவபுரம், திருவன்னியூர் முதலிய தலங்கள் உள்ளன.

தலப்பெருமை:

மூவர் தேவாரத் திருப்பதிகங்களையும் பெற்றது இத்தலம். புகழ்த் துணை நாயனார் பூசித்து முத்திப்பேறெய்திய தலம். உண்மையானந்த முனிவர் வழிபட்ட பெருமை உடையது. கோச்செங்கட் சோழனின் திருப்பணியைப் பெற்றது.

கோயிலமைப்பு:

அரிசிலாற்றின் தென்கரையை அடுத்து, பேருந்துச்சாலைக்கு வடபால் கோயில் விளங்குகிறது. மேற்கு நோக்கிய சந்நிதி. நாட்டுக் கோட்டை நகரத்தாரின் சீரிய கற்பணிகளைப் பெற்றுத் திகழ்ந்து வருகிறது. கோயிலுக்கு முன்னால் வலது புறத்தில் தீர்த்தம் உள்ளது. மூன்றுநிலைக் கோபுரம் கோயிலை அழகுசெய்கிறது. ஒரு திருச்சுற்று மட்டுமே உள்ளது. இராஜகோபுரவாயிலைக்கடந்து உள்ளேசென்றதும் கோபுரவாயிலின் இருபுறமும் சந்திர சூரியர் திருவுருவங்கள் உள்ளன. கன்னி மூலையில் தல விநாயகர் விளங்குகிறார். மேற்குப்பிராகாரத்தில் முருகன் திருமகள் கோயில்கள் உள்ளன. கிழக்குப் பிராகாரத்தில் பைரவர், புகழ்த்துணையார், நவக்கிரகங்கள்உள்ளன. கோஷ்டங்களில் வடக்கே நான்முகன், கிழக்கே இலிங்கோற்பவர், தெற்கே தக்ஷிண மூர்த்தி ஆகிய மூர்த்திகள் உள்ளனர். வலம் வந்து நந்தி பலிபீடங் களை வழிபட்டு, கோயிலின் மகாமண்டபத்தை அடைவோம். சுவாமி சந்நிதி அம்பாள் சந்நிதிகளை இணைத்து விளங்குகிறது இம்மண்டபம். சுவாமி சந்நிதியின் நுழைவாயிலில் துவாரபாலகர்கள் உள்ளனர். துவார விநாயகரை வழிபட்டு அருள்மிகு சொர்ணபுரீசுரரைத் தரிசிப் போம். சுவாமியைத் தரிசிக்கும்போது புகழ்த்துணைநாயனார் வழி பட்ட இத்தலத்தின் சிறப்புமிகு வரலாறு நம் நினைவுக்கு வரும்.

அகத்தடிமை செய்யும் அந்தணன் தான்
 அரிசில் புனல் கொண்டுவந்து ஆட்டுகின்றான்
மிகத்தளர்வெய்திக் குடத்தையும்நும்
 முடிமேல் விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்தவனுக்கு நித்தற் படியும்
 வருமென் றொரு காசினை நின்றநன்றிப்
புகழ்த்துணை கைபுகச் செய்துகந்தீர்
 பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதன் நீரே.

என்று சுந்தரர் அருளிய திருப்பாடலை ஓதி வழிபட்டு அம்பாள் சந்நிதியை அடைவோம். அருள்மிகு அழகாம்பிகை நம் உள்ளத்தில் நிறைந்து நிற்கும் தாயாக விளங்குகிறாள். வழிபட்டு மகா மண்டபத்தி லுள்ள விநாயகர், சமயாசாரியர், புகழ்த்துணையார், அவர்தம் துணைவி யார், உண்மையானந்த முனிவர் ஆகியோரைத் தரிசித்து மீள்வோம்.

மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு படிக்காசளித்தபரமர். இறைவி திருப்பெயர் அருள்மிகு அழகம்மை. தலமரம் வில்வம். தீர்த்தம் கோயிலின் எதிரில் உள்ளது. அரிசிலாறும் இத்தலத் தீர்த்தமாகும்.

புராண வரலாறு

"புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி,
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்"

என்பது திருத்தொண்டத்தொகை.

புகழ்த்துணை நாயனார்

செருவிலிபுத்தூர் என்னும் பழம் பெயரை உடைய இத்தலத்தில் சிவவேதியர் குலத்தில் அவதரித்தவர் புகழ்த்துணை நாயனார். திரு அரிசிற்கரைப்புத்தூர் இறைவனுக்கு அகம்படிமைத் தொண்டுபூண்டு மிக்க அன்போடு சிவாகமநெறிப்படி பெருமானைப் பூசித்துவந்தார். நாட்டில் பஞ்சம்தோன்றி மக்கள் பசியால்வருந்தும்நிலையேற்பட்டது. புகழ்த்துணை நாயனார் பஞ்சத்தால் வாடும் நிலைவரினும் எம்பெருமான் வழிபாட்டை நான் விடுவேனல்லேன் என்ற மனஉறுதியோடு இரவும் பகலும் திருமஞ்சனம் ஆட்டுதல், நறுமலர்சூட்டல்,நிவேதனம்புரிதல் ஆகிய பணிகளை வழுவின்றிப்புரிந்தார். ஒருநாள் பெருமானுக்குத் திரு மஞ்சனமாட்டும்போது பசியால் நிலைதளர்ந்து திருமஞ்சனக் குடத்தைத் தாங்கலாற்றாது இறைவன் திருமுடிமேல் வீழ்த்தி நடுங்கிச் சோர்ந்து வீழ்ந்தார். மயங்கித் துயில்கொண்டார். இறைவன் அவர் கனவில் தோன்றிப் பஞ்சம்தீரும்வரை உமக்கு ஒரு பொற்காசு வைப்போம் என்று அருளி மறைந்தார். புகழ்த்துணையார் துன்பம் நீங்கித் துயிலுணர்ந்து எழும்போது பெருமான் எழுந்தருளியிருக்கும் பீடத்தின்கீழ் பொற்காசிருக்கக்கண்டு அதனைக்கொண்டு தம் வறுமைநீங்கி இறைவனுக்குப் பணிகள் பலவும் புரிந்து நெடிதுநாள் வாழ்ந்து இறைவன் திருவடிநிழலை அடைந்தார். இவர் வரலாற்றைப் பெரிய புராணத்துட் காணலாம்.

கல்வெட்டு:

ஏழு கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. அவையெல்லாம் சோழர்காலத்தவை.

1. இராசராசன் 7-ம் ஆண்டில் திருப்புத்தூர்உடையார் பரம சுவாமிக்கு 1300 குழி நிலம் வழிபாட்டிற்காக விட்டான். அப்போது

மூலகிருகம் கல்லால் படைக்கப்பட்டது. ஊர்ப்பெயர் திருநறையூர் நாட்டுப் பிரமதேயமான பரதாயகுடி என்று கண்டிருக்கிறது.

2. அதே அரசனால் தனது 22-ம் ஆண்டில் ஒரு விளக்குக்காக 3 மா நிலம் கொடுக்கப்பட்டது.

3. அதே அரசனால் தனது 28-ம் ஆண்டில் விளக்குத்தானம் செய்யப்பட்டது.

4. இராசராசன் காலத்தில் மேல்வேம்பாநாட்டு நல்லார் குடியினன் ஒருவன் சூரியதேவன் கோயிலைக் கட்டினான் என்றும், அதற்கு வழிபாடு நடத்த முப்பதுகாசு தந்து அதற்கு 6 மா நிலமும் விடப்பட்டது என்றும் தெரிவிக்கிறது.

5. முதற்குலோத்துங்கன் காலத்தில் வழிபாட்டிற்காக நிலம் தரப்பட்டது.

6. விக்கிரமசோழன் காலத்தில் திருப்புத்தூர் அழகிய தேவருக்கு ஒரு விளக்குக்காகப் பணம் தரப்பட்டது.

7. கோச்செங்கட்சோழன் : ஒரு கல்வெட்டில் குலோத்துங்க சோழவளநாட்டு அழகார் திருப்புத்தூர் என்று ஊர்ப்பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்

மின்னுஞ் சடைமேல் இளவெண் திங்கள் விளங்கவே
துன்னுங் கடல்நஞ் சிருள்தோய் கண்டர் தொன்மூதூர்
அன்னம் படியும் புனலார் அரிசில் அலைகொண்டு
பொன்னும் மணியும் பொருதென் கரைமேற் புத்தூரே.

மேவா அசுரர் மேவெயில் வேவ மலைவில்லால்
ஏவா ரெரிவெங் கணையால் எய்தான் எய்தும்ஊர்
நாவால் நாதன் நாமம் ஓதி நாள்தோறும்
பூவால் நீரால் பூசுரர் போற்றும் புத்தூரே.

நறவங் கமழ்பூங் காழி ஞான சம்பந்தன்
பொறிகொள் அரவம் பூண்டான் ஆண்ட புத்தூர்மேல்
செறிவன் தமிழ்செய் மாலை செப்ப வல்லார்கள்
அறவன் கழல்சேர்ந் தன்போ டின்பம் அடைவாரே.

திருச்சிற்றம்பலம்.

—திருஞானசம்பந்தர்.

2. திருச்சிவபுரம்

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் வட்டத்தில் சாக்கோட்டைக்குக் கிழக்கே 2 கிலோமீட்டர் தூரத்தில் இத்தலம் உளது. கும்பகோணத்திலிருந்து நாச்சியார்கோயில் செல்லும் பேருந்துகளில் ஏறிச் சாக்கோட்டைக்கு அருகிலுள்ள திருச்சிவபுரம் சாலை என்னும் இடத்தில் இறங்கிக் கிழக்கே 2 கிலோமீட்டர் தூரம் சென்ருல் இத்தலத்தை அடையலாம்.

தலப் பெருமை:

திருஞானசம்பந்தர் அருளிய மூன்று திருப்பதிகங்களையும், திருநாவுக்கரசர் அருளிய ஒரு திருப்பதிகத்தையும் பெற்ற தலம். சண்பகாரண்யம் குபேரபுரி என்பன இத்தலத்தின் மறுபெயர்கள். திருமால் வெள்ளைப்பன்றியுருவெடுத்து ஊழிவெள்ளத்தில் அமிழ்ந்த பூமியை எடுத்து நிறுத்தி வழிபட்ட தலம். இப்புராண வரலாறு இத்தலத்தேவாரத்திலும் குறிக்கப்படுகிறது. குபேரன், தனபதி என்ற பெயருடைய மன்னனுகப்பிறந்து இத்தலத்து இறைவனை வழிபட்டு அருள்பெற்றுள்ளான்.

கோயிலமைப்பு:

சிவபுரம் சிறிய அழகிய கிராமம். ஊரின் நடுவே கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலுக்கு முன்புறம் தீர்த்தம் உள்ளது. ஐந்துநிலைகளோடுகூடிய இராஜகோபுரம் உள்ளது. இரண்டு திருச்சுற்றுக்கள் உள்ளன. இராஜகோபுர நிலைவாயிலைக் கடந்தவுடன் கொடிமர விநாயகர் நந்தி பலிபீடங்கள் உள்ளன. வலப்பக்கம் வசந்த மண்டபமும் அதை அடுத்துப் பைரவர் கோயிலும் உள்ளன. வெளிப்பிராகாரத்தில் திருநந்தவனம் உள்ளது. இரண்டாவது வாயிலைக் கடந்தவுடன் வாயிலின் இருபுறங்களிலும் சோமசூரியர்கள் விளங்கக்காணலாம். நாட்டுக்கோட்டை நகரத்தார் இத்திருக்கோயிலை அழகுறத் திருப்பணிபுரிந்துள்ளார். மேலைப்பிராகாரத்தில் விநாயகர், முருகன், திருமகள் ஆகியோர் கோயில்கள் உள்ளன. வடக்குப் பிராகாரத்தில் சண்டேசுவரர்கோயில் உள்ளது.

கோஷ்டங்களில் தென்பால் நடனகணபதி திருவுருவம் உள்ளது. திருமால் வராக அவதாரமெடுத்து வழிபடும் ஐதிகச்சிற்பம் புடைப்புச்சிற்பமாக அழகுறச் செதுக்கப்பட்டுள்ளது. அடுத்து, தக்ஷிணமூர்த்தி விளங்குகிருர். மேற்கே இலிங்கோற்பவர், வடக்கே பிரமன் துர்க்கை உள்ளனர். வலம்வந்து கோயிலின் மகாமண்டபத்தை அடைவோம். சுவாமி அம்பாள்கோயிலை இணைத்து விளங்குகிறது

மண்டபம். அம்பிகை தெற்குநோக்கி விளங்குகின்றார். அர்த்தமண்டபத்தில் சைவ சமயாசாரியர்களும், நடராஜர் சிவகாமியம்மை மற்றும் பஞ்சமூர்த்திகளும் உள்ளனர். துவாரவிநாயகரையும் துவாரபாலகரையும் தரிசித்து அருள்மிகு சிவபுரநாதரை வழிபடுவோம்.

அருள்மிகு சிவபுரநாதர் பேரழகோடு நம்மைக் கவர்கிறார். தனபதி அந்தணச்சிறுவனை அறுத்து இரத்தாபிஷேகம் புரிந்த சிவப்புக்கோடுகள் சிவலிங்கத்தில் படிந்துள்ளன. திருஞானசம்பந்தர், அப்பர் ஆகியோர் போற்றி வழிபட்ட அற்புதத் திருப்பாடல்களை ஓதி வழிபட்டு அம்பாள் சந்நிதியை அடைவோம்.

அம்பிகை அருள்மிகு சிங்காரவல்லி. அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லியாக, கருணைகூர்கண்களோடு விளங்குகின்றார். அம்பிகையைத் தோத்திரித்து வழிபாட்டை முடிக்கும்போது மற்றொருமுறையும் சிவபுரநாதரை வழிபடவேண்டும் என்று மனம் எண்ணுவதை ஒவ்வொருவரும் உணரலாம்.

மூர்த்திகள் :

சுவாமியின் திருப்பெயர் அருள்மிகு சிவபுரநாதர் அம்பிகையின் திருப்பெயர் அருள்மிகு சிங்காரவல்லி. தலமரம் – சண்பகம். தீர்த்தம் சந்திரபுஷ்கரணி.

புராண வரலாறு

திருமால் வழிபட்டது :

திருமால் கொண்ட வடிவங்களுள் ஒன்று வராகம். நிலத்தை ஊழி வெள்ளத்திலிருந்து எடுத்து நிறுத்திக்காக்கத் திருமால் இறைவனைவேண்டி வெள்ளைப்பன்றித் திருவுருக்கொண்டார். சுவேதவராகராய்த் தன்கொம்பின் நுனியில் உலககோளத்தைத் தூக்கி நிறுத்திய பின், இத்தலத்திற்கு வந்து சிவபுரநாதரைப் பலநாளும் வழிபட்டு அருள்பெற்று, வராக வடிவு நீங்கப்பெற்றுக் காத்தல் தொழிலைப் பெற்றார். இவ்வரலாற்றை,

' மதமிகு நெடுமுகன் அமர்வளை மதிதிகழ்
    எயிறதன் நுதிமிசை
இதமமர் புவியது நிறுவிய எழில்அரி
    வழிபட அருள்செய்த பதமுடையவன் அமர் சிவபுரம் '

' வென்றிகொள் எயிற்று வெண்பன்றி முன்னாள்
சென்றடி வீழ்தரு சிவபுரமே '

எனத் திருஞானசம்பந்தரும்,

'பிறையெயிற்று வெள்ளைப்பன்றி பிரியாது பலநாளும்
வழிபட்டேத்தும்
சீரவன்காண் ....சிவபுரத்து எம் செல்வன்தானே'

என அப்பரடிகளும் விதந்தோதுவதை இத்தலத் தேவாரத்துட் காணலாம்.

இவ்வரலாற்றுச் சான்றுகளாக இத்தலத்தில் திருமால் கோயில் இருந்து சிதைந்தது என்றும், வராகதீர்த்தம் மட்டுமே உள்ளது என்றும் கூறப்படுகின்றன. சங்குசக்கரக்கல் கிழக்கு எல்லையில் வராக குளத்தருகே உள்ளது.

தனபதி வழிபட்டது :

குபேரன் ஒருசாபத்தால் நிலவுலகில் மன்னனாய்த் தோன்றி, தனபதி என்ற பெயரோடு இவ்வூரில் வாழ்ந்துவந்தான். நாடோறும் தன் பழி நீங்க இத்திருக்கோயிலை வழிபட்டு வந்தான். ஒருநாள் அவன் வலம் வரும்போது வடக்குப் பிராகாரத்தில் கோமுகை அருகில் ஒருசெப்புப்பட்டயத்தைக் கண்டெடுத்தான். அதில் பின்வரும் வடமொழி சுலோகம் எழுதப்பெற்றிருந்தது.

"மாகே சோமதினே மகா(அ)சித சதுர்த்தச்யாம் நிசாயாம்ஹி
யோ பூபோபாலக மேகமங்கஜநிபம்பிரீத்யா பித்ருப்யாம்நிருதம்
க்ரந்தன் ஹந்தகளே(அ)சிநா சுமிருதளே கங்காதரம் சங்கரம்
தத்ரக்தேன யதா(அ)பிஷிஞ்சதி ததாதத்தேன லப்யம்தனம்'"

மாசிமாதத்தில் மகாசிவராத்திரி தினத்தில் மிக அழகிய ஆண் குழந்தைஒன்றை, தந்தை தாய்தலைகால்பிடிக்க ஒருவன் கூரியவாளால் அரிந்து குருதியைச் சுவாமிக்கு அபிஷேகிப்பானானால் அளவற்ற செல்வம் பெறுவான் என்ற பொருளுடைய இப்பாடலைக்கண்ணுற்றதனபதி அவ்வாறே சிவராத்திரி அன்று அந்தணர் ஒருவரை வேண்டி அவர் துணையோடு சுவாமிக்கு இரத்தாபிஷேகஞ் செய்ய முற்பட்டான். தாய் தந்தை மன்னன் செயலையறிந்த குழந்தை தெய்வமே நமக்குத்துணை என்று அம்பிகையை மனமாரத்துதித்தது. கருணையே வடிவான அம்பிகை இறைவன்முன் தோன்றி நம்குழந்தைகளான கணபதியையோ முருகனையோ இவ்வாறு செய்துகொள்ளத் தங்களுக்கு மனம்வருமா என்று இறைவனைக்கேட்க, பெருமான் வெளிப்பட்டுத் தனபதியின் சாப நிவர்த்திக்காகவே இவ்வாறுசெய்தோம் கவலைவேண்டாம் என்று அம்மைக்கு ஆறுதல்கூறி, தனபதியை மீண்டும் குபேரனாகும்படிச் செய்தார் என்பதும், குழந்தை தாய்தந்தை ஆகியோருக்கு வேண்டும்

வரங்களை அருளினார்; தாய் தந்தையராக இந்திரனும் இந்திராணியும் வந்தனர் என்றும், குழந்தையாக அக்னிதேவன் வந்தான் என்றும் கூறுகின்றனர். இவ்வரலாறு செவிவழியாக இத்தலத்தில் வழங்கிவரு கிறது. இதனைக் குறித்தும் அடையாளமாகக் கிழக்குப்பிராகாரத்தில் குழந்தை, இந்திராணி, தனபதி, இந்திரன் ஆகியோர் சிவலிங்கத்திரு வுருவில் விளங்குவதைக்காணலாம்.

திருமுறைப்பாடல்கள்:

இத்தலத்தைப்பற்றிய தேவாரத்திருப்பதிகங்கள் நான்கு உள்ளன. திருவாசகத்தில்,

> " ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி
> செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி "

என இத்தலம் குறிக்கப்படுகிறது. அருணகிரிநாதர் இத்தல முருகன் மீது திருப்புகழ் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகத்துள் சிவபெருமானே நான்முகனைக்கொண்டு படைத்தலை யும், திருமாலைக்கொண்டு காத்தலையும், உருத்திரனைக்கொண்டு அழித் தலையும் புரிகின்றார் என்ற உண்மை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. பாடல்கள்தோறும் சிவபுரநாதரை வழிபடுவோர் அடையும் இம்மை மறுமைப்பயன்கள் கூறப்பட்டுள்ளன. அப்பர் அருளிய திருத்தாண்ட கப்பதிகம் சிவபுரத்திறைவன் எல்லாமாக விளங்கும் இயல்பையும், கருதுவார் இதயத்துக் கமலத்தூறும் தேனாக விளங்கும் சிறப்பியல் பையும் கூறுகிறது

> வானவன்காண் வானவர்க்கு மேலா னான்காண்
> வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
> ஆனவன்காண் ஆனைந்தும் ஆடி னான்காண்
> ஐயன்காண் கையில் அனல் ஏந்தி யாடும்
> கானவன்காண் கானவனுக் கருள் செய் தான்காண்
> கருதுவார் இதயத்துக் கமலத் தூறும்
> தேனவன்காண் சென்றடையாச் செல்வன் றான்காண்
> சிவனவன்காண் சிவபுரத்தெம் செல்வன் தானே.

— திருநாவுக்கரசர்.

கட்டுரை எண். 9.

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M.A., B. Lit.,
D. P. P. A., D, U. N. I. U,

ததியுறு மத்தில் சுழலும் என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண்டாய்; கமலாலயனும்,
மதியுறு வேணி மகிழ்நனும், மாலும் வணங்கியென்றும்
துதியுறு சேவடியாய்! சிந்துரானன சுந்தரியே! (7)

அ. கமலாலயனும், மதியுறு வேணி மகிழ்நனும்
மாலும் வணங்கி என்றும் துதியுறு சேவடியாய்

(1) தாமரையினைக் கோயிலாகவுடைய பிரமன், சடையில் பிறையணிந்த இன்பக் கணவன், திருமால் ஆகிய மூவரும் வணங்கித்துதிக்கும் சிவந்த திருவடியுடையவளே என அழைக்கிறார்.

(2) மும்மூர்த்திகளும் தங்களது முத்தொழில்களும் முறையே நடைபெறவும், உலகம் நன்மையடையவும் அம்பிகையினை வணங்கித் துதிக்கின்றனர்.

(3) 'கமலாலயன்' என்றது ஒரு அழகிய சொல்லமைப்பாகும். வேறு ஆலயங்கள் இன்றி இருப்பவன் என்னும் பொருள்பட, கமலத்தைமட்டுமே ஆலயமாகவுடையவனை 'கமலாலயன்' என்றார்.

(4) ஏகாதச உருத்திரர்களும், மற்றும் கந்தபுராணம் உருத்திரர் கேள்விப்படலத்தில் குறிப்பிடப்படும் பதினொருகோடி உருத்திரர்களும் சிவபெருமான் போன்றே மதியுறு வேணியுடன் விளங்குவர் அவர்களுமல்லாது அம்பிகையின் கணவனான சிவபெருமானே வணங்கித் துதிக்கிறான் என்னும் பொருள்விளங்க 'மதியுறு வேணி மகிழ்நன்' என்றார். பின்னும், "வனங்கள் மூன்றுடை நாதன்" என்றே குறிப்பிடுகிறார்.

(5) முதல்மூவரும் போற்றித் துதித்த விவரம் தேவி பாகவதத்தில் விளக்கமாகக் கூறப்படுகிறது. தாமரையில் வீற்றிருந்த அயன்,

"தன் ஆலயமாகிய தாமரை எதனை ஆதாரமாகக்கொண்டு நிற்கிறது? தாம் எங்கிருந்து வந்தோம்?" என்றெல்லாம் சிந்திக்கத்துவங்குகிறன். தாமரையின் தண்டுவழியே கீழே இறங்கினன். அத்தண்டு திருமாலின் திருவுந்தியில் தோன்றக் கண்டான். அத்திருமாலோ கருங்கடலில் படுத்திருந்தான். எங்கும் பெருவெள்ளம். மண்ணும், உயிர்களும் மற்றெதுவும் தோன்றுதநிலை. "நான் யார்? நீர் யாவர்? நப்பணி என்ன?" எனத் திருமாலை வினவினன் பிரமன். உனக்குத் தெரிந்தளவே எனக்கும்தெரியும் என்றுர் திருமால். அச்சமயம் அங்கு அரனும் வந்தனர். அம்மூவரும் காணப் புதுமையான விமானமொன்று அங்குத்தோன்றியது. "மூவரும் விமானத்தில் அமருங்கள்" என்று ஓர் அசரீரி எழுந்தது அவ்வாறே மூவரும் விமானத்தில் அமர்ந்தனர். கடிதே பறந்த விமானம் பல அண்டங்களையும் கடந்து சென்றது. மூவரும் வியக்கும்வண்ணம் ஆங்காங்கே, வேறு அரனும், அயனும், அரியும் தங்கள் தங்கள் உலகங்களில் வீற்றிருக்கக் கண்டனர். அவர்களது வியப்புக்கு விளக்கம் கிடைக்குமுன் விமானம் மணித்தீவின் மத்தியில் இருக்கும் ஸ்ரீபுரத்தில் சென்று இறங்கியது. அங்குச் சிந்தாமணிக் கிருஹத்தில் கொலுவீற்றிருந்த சகலபுவனங்களுக்கும் ஈச்வரியாகிய அன்னையினைக் கண்டனர். அவளது பரிவாரங்களைப் போலவே மூவரும் பெண்ணுருவெய்திவிட்டனர்.

அன்னையினைக் கண்ணுற்ற திருமால் கூறினர் "பெருவெள்ளப் பிரளயத்தில் ஆலிலைமிசைக் குழவியாய் இருந்த என்னைத் தாலாட்டி வளர்த்து ஆளாக்கியவள் இவள் தான்! நீங்களும் வாருங்கள்! அன்னையினை வணங்கித் துதிப்போம்" என்றுர்.

அப்போது மூவரும் சென்று வாயாரத் துதித்த தோத்திரமே 'புவனேஸ்வரி துதி' எனப்படும். அவர்களின் துதியால் மகிழ்ந்த அன்னை அவர்களை மீண்டும் ஆண்களாக்கி, தக்க துணைவியைத் திருமணம் முடித்து, முத்தொழில் புரியும் ஆற்றலையும் முறையே அளித்தாள் என்பது தேவிபாகவதம் கூறும் வரலாறு. அவ்வரலாறு பிரமன் கமலாலயத்தில் வீற்றிருந்த நிலையிலிருந்தே துவங்குகிறது. அதனைமனத்தில் கொண்டே அபிராமிபட்டர் 'கமலாலயனும்' என்று தொடங்கி மூவர் துதிக்கும் சிறப்பைக் கூறுகிறர்.

(6) ஆதாரக் கமலத்தில் உறங்கும் குண்டலினிசக்தி மேல் எழும்பி, சகஸ்ரகமலத்தில் அம்பிகையின் தரிசனம் காணுமுன் - பிரம்மக்கிரந்தி, விஷ்ணுக்கிரந்தி, ருத்திரக்கிரந்தி ஆகிய முடிச்சுக்களைக் கடந்து மேலே செல்லுகிறது. அதனையே இப்புராணக்கதை நவவிமானப்பயணம் என்று நயம்பட விளக்குகிறது.

(7) அவ்வாறு அவ்விமானத்தில் சென்று தரிசனம் கண்டு, திருமணம் கொண்டு, தத்தம் தொழிலைப் புரியத்துவங்கிய மூவரும் அன்னையின் அருளை மறவாது எப்போதும் போற்றித் துதிக்கின்றனர். ஆகவே, என்றும் துதியுறு சேவடியாய்' என்றார்.

(8) மகிழ்நன் மனைவியைப் போற்றித் துதித்தல் முறையோ என்னில், ''கறைக்கண்டனுக்கு மூத்தவள் ஆதலின் முறைமைத்தே'' என்கிறார் ம. கதிர்வேற்பிள்ளையவர்கள். சக்தியும் சிவமும் பரஸ்பரம் போற்றித் துதித்தல் சமரஸம் போலும்!

(9) ''வள்ளியை அல்லது பின் துதியா விரதா'' எனக் கந்தரனுபூதியிலும் இச்சாசக்தியின் வடிவான வள்ளியினை வடிவேலன் துதித்தல் குறிப்பிடப்படுகிறது.

(10) மதுகைடபரை வதைக்கவேண்டிப் பிரமன் திருமாலை எழுப்ப முயன்றான். நித்திரா தேவியின் பிடியில் அகப்பட்டிருந்த திருமாலை எழுப்பவேண்டி, பிரமன் அம்பிகையினைப் பலவாறு துதித்தான். அவளும் அருள்செய்தாள். இதுவும் தேவிபாகவதம் கூறும் வரலாறு.

(11) அம்பிகையின் பெருமைகள் அடங்கிய துதிநூலாக 'ஆனந்தலகரி' யினை இறைவன் கைலாயத்தின் சுவரில் எழுதினான்.

(11-A) திருமால் ஹயக்கிரீவராகி லலிதாசகஸ்ரநாமமென்னும் தோத்திர நூலை அகத்தியருக்கு உபதேசித்தார்.

(12) பண்டன், மகிடன் முதலான பல அசுரர்களை அடக்க வேண்டி அவ்வப்பொழுது மும்மூர்த்திகளும் தேவியினைத் துதித்து வேண்டி வணங்குகின்றனர் என்பதைச் சாக்த நூல்கள் பலவும் விளக்கும்.

(13) ஆதிசங்கரரின் சீடரும் பிரமனின் அவதாரம் என்று கூறப்படுபவருமாகிய சுரேஸ்வராச்சாரியார் (மண்டனமிச்ரர் என்பது பூர்வாச்ரமப் பெயர்) சாரதாதேவியினைத் துதித்தார்.

(13-A) திருமாலின் அவதாரமாகிய இராம, கிருஷ்ண, பரசுராம, பலராம அவதாரங்களில் அம்பிகை துதிக்கப்பட்ட வரலாறுகள் உண்டு. இவ்வாறு, உலக சிருஷ்டிக்கு முன்னும், பின்னும், பிரம விஷ்ணுக்களின் அவதாரங்களிலும் துதிக்கப்படுவதால் 'என்றும் துதியுறு சேவடியாய்' என்றார்.

ஆ. சிந்துரானன சுந்தரியே!

(1) "செந்நிற சிந்துரப்பொட்டிட்ட திருமுகமுடைய அழகியே" என்பது பொருள்.

(2) "சிந்தூர - திலகாஞ்சிதா" சிந்துரப் பொட்டால் அலங்கரிக்கப்பெற்றவள் என்கிறது லலிதாசகஸ்ரநாமம்.

(3) முன்னர் 'சிந்துர வண்ணப்பெண்' என்றும், 'சுந்தரி' என்றும் தனித்தனியே அழைத்தார். இங்கு 'சிந்துர ஆனன சுந்தரி' எனச் சிந்துரம் அழகு இரண்டினையும் இணைத்துக்கூறினர்.

இ. ததியுறு மத்தில் சுழலும் என் ஆவி தளர்விலதோர் கதியுறு வண்ணம் கருது கண்டாய்!

(1) தயிரிடைப்பட்ட மத்தினைப்போல் அலைக்கழிக்கப்படும் என்னுயிர் நற்கதியடையும்படி திருவுளம்பற்று என வேண்டுகிருர்.

(2) "ஸத்கதிப்ரதா" நற்கதியளிப்பவள் என்று லலிதா சகஸ்ரநாமம் போற்றுகிறது. ஆகவே, அவளைத் தனக்கும் நற்கதியளிக்க வேண்டுகிருர்.

(3) பிறப்பு - இறப்பு என்னும் தயிரிடைப்பட்டு உயிர் என்னும் மத்து, சுழன்று, சுற்றி, அலைந்து பரிதவிக்கிறது - தளர்கிறது. மத்தைச் சுழற்றும் கயிருகப்பந்தபாசங்கள் அமைகின்றன. கயிற்றினை இயக்கும் மாதாக அம்பிகை இருக்கிருள். ஜனன மரணமென்னும் தயிரினைக் கடையும் அம்மாது விரும்பினுல் ஆவியென்னும் மத்தினை விடுவித்து வெளியேற்றிவிடலாம். அதனைச் செய்ய அம்பிகையினை வேண்டுகிருர்.

(4) "ததியுறு மத்தில் சுழலும் என் ஆவி கண்டாய், தளர்விலதோர் கதியுறு வண்ணம் கருது" என்று கொண்டுகூட்டிப் பொருள் கொண்டாலும் பொருந்தும். ததியுறு மத்தில் சுழலும் ஆவியினைக் கண்டபின்னும் வாளாவிருத்தலாகாது என்பது கருத்து.

(5) முதுமையுற்று மரணப்படுக்கையில் இருக்கும் காலத்தில், திடமான உணவு வகைகள் குன்றித் திரவ ஆகாரம்மட்டுமே உட்கொள்ளுகின்றனர். அதனுல் தொண்டையில் கபம் கட்டிவிடுகிறது. அந்நிலையில் தயிர் கடைவது போன்று 'கடகட' என்ற ஒலியுடன் சுவாசம் வாங்குகிறது. அப்போது நெஞ்சில் கட்டிய கபம் தயிராகவும், உயிர் மத்தாகவும் காலபாசம் தயிர்கடையும் கயிருகவும்

அமைகிறது. காலபாசம் உயிரை வெளியே இழுக்கவும், தளர்ந்து விட்ட இதயமும் நுரையீரலும் உள்ளே இழுக்கவும் கபம் அடைக்கவும் ஆவி தத்தளிக்கிறது. அவ்வாறு ஆவி தளர்வுருமல் அம்பிகை கருதினுல் அடியவரின் உயிர் துயரின்றி 'ஸ்ரீபுரம்' எய்திவிடும்.

(6) " மத்துறு தண்தயிரின் புலன்
தீக்கதுவக் கலங்கி
வித்துறுவேனை விடுதி கண்டாய்"

என மணிவாசகர் நீத்தல்விண்ணப்பம் விடுக்கிருர்.

" மத்துறு தயிரே போல் மறுகும் என்
உள்ளம் தானும் "

என அப்பரும் குறிப்பிடுகிருர்.

(6-A) பாவநாசம் உலகம்மை கலித்துறை அந்தாதியில் நமசிவாயப் புலவரும்,

" தயிரிட்ட மத்தினைப் போல் அலைத்தால் அத்ததி மறிப்பேன்
அயிரிட்ட வேலை யுலகீன்ற நின் திரு ஆணையிட்டே "

என்கிருர்.

(7) மனிதர்கள் பந்தபாசங்களினுலும் மயக்கத்தினுலும் வாழ்வில் சில கூடாத செயல்களைச் செய்துவிடுகின்றனர். அத்தகைய தவறு களுக்குப் பலவகைப்பட்ட நரகங்களில் புகுந்து அல்லல் எய்துகின் றனர் எனத் தேவிபாகவதம் கூறுகின்றது. ஆனுல் அம்பிகையின் அடியவர்கள் தங்களது குறைகளை நீக்கி, நன்னெறியில் வாழ்வதால் அவர்களை அன்னை தளர்விலதோர் கதியுறுவண்ணம் கருதிவிடுகிருள்.

(8) அன்னையின் வரலாறுகளைக்கூறும் அருள்நூல்களைக்கற்பதே அடியவர்களும் – ஏன்? அவர்களது முன்னேர்களுங்கூட நற்கதி எய்தும்வண்ணம் செய்துவிடுகிறது என்பதையும் தேவிபாகவதம் விளக்குகிறது. ஒரு முனிவரின் சாபத்தால் 'பரிட்சித்' மன்னன் பாம்புகடித்துத் துர்மரணம் எய்திவிடுகிருன். அவன் தளர்விலதோர் கதியுறுவண்ணம் அருள்செய்ய அவனது குமாரன் 'ஜனமே ஜயன்' வியாசமுனிவரிடம் வேண்டினுன். அவரும் நன்றென மகிழ்ந்து, முறைப்படி தேவிபாகவதத்தினை ஒன்பதுநாட்கள் நவாவரண விதி யினை அனுசரித்து வழிபாடுகள் நிகழ்த்திப் பிரசங்கம் செய்தார். ஒன்பதாவதுநாள் தேவிபாகவதக் கதையினை வியாசர்கூறிப் பூர்த்தி செய்யும் நேரத்தில் பரிட்சித் மன்னன் தனது குமாரன்முன் காட்சி

யளித்து 'மகனே! நான் துர்மரணத்தின் துர்க்கதியிலிருந்து நற்கதி எய்தித் தேவி சாயுஜ்யம் அடைந்துவிட்டேன். குரு வியாசரின் அருளாலும் அன்னை பராசக்தியின் அருளுக்குப் பாத்திரமாக்கி என்னை நற்கதிப்படுத்திய நீயே புத்திரன்'' என்று பாராட்டி மறைந்தான்.

அன்னையின் அருள் நூல்களைப் படிக்கக் கேட்பதே முன்னோரும் நற்கதி எய்த வழிவகுக்குமென்றால், அவளது அடியவர்கள் நற்கதி எய்துவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

(ஊ) "கறையுண்ட கண்டர்பால் அம்மை! நின் தாளிற் கருத் தொன்றும் உண்டாகுமேல் திட்டாந்தமாக யமபடரெனும் திமிரம் (இருள்) அணுகா கதியுண்டு'' எனத் தாயுமானவரும் அன்னையினை நோக்கிப் பாடியிருக்கிறார்.

(ஈ) முதற்பாடலில் அன்னையின் உச்சித் திலகத்தைக் குறிப் பிட்டார். இப்பாடலில் புருவமத்தியில் அணியும் சிந்துரத் திலகத் தைக் கூறினார். மனத்தத்துவத்தின் ஆதாரமாகிய ஆக்ஞாசக்கரத்தின் இருப்பிடம் புருவமத்தியாகும். அங்கு அன்னை சூடும் சிந்துரத் திலகத்தைத் தியானிப்பவர்களுக்கு மன அமைதியும், ஒருமைப்பாடும் கிட்டும்.

இப்பாடலின் பாராயண பலன் மன அமைதி எய்துதலும், துர்மரணம் எய்திய முன்னோர் நற்கதியடைதலும் ஆகும்.

சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கஎன் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோ?சக மேழுமளித்(து)
உண்டா னுறங்க ஒழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே! 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றும் ஐம்பால்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகலகலாவல்லியே, 2

— ஸ்ரீ குமரகுருபரர்.

திருமணஞ்சேரி

வித்துவான்

திரு. நா. காளிங்கராஜ் M. A., B. Lit. B. T.

இத்தலம் மாயூரம் வட்டத்தில் குத்தாலத்திற்கு வடக்கே சுமார் மூன்றுகல் தொலைவில் விக்கிரமசோழனுற்றின் மேல்கரையிலுள்ளது. சிறு கிராமம். இன்று இவ்வூருக்குப் பேருந்து வசதி உள்ளது. ஊரின் நடுவில் கிழக்குநோக்கிய சந்நிதியாகக் கோயில் உள்ளது.

இது திருஞானசம்பந்தராலும் அப்பர்பெருமானுலும் பாடல்கள் பெற்ற திருத்தலம். எனவே இத்தலம் கி. பி. ஏழாம் நூற்றுண்டிற்கு முன்னரேயே சிறந்து விளங்கியமை புலனுகின்றது. இத்தலத்தினை ஞானசம்பந்தப்பெருமான் "மயிலாரும் மல்கிய சோலை மணஞ்சேரி" என்றும், "வண்பொழில் சூழ் மணஞ்சேரி" என்றும், "மாடங்கள் சூழ் மணஞ்சேரி" என்றும், "மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி" என்றும், "வற்ருத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி" என்றும் புகழ்ந்துள்ளார்.

அப்பர்பெருமான் "சிட்டர் வாழ் திருமணஞ்சேரி" என்றும், 'சீர்பரந்ததிருமணஞ்சேரி' என்றும், 'மதில்சூழ் மணஞ்சேரி' என்றும் புகழ்கின்ருர். அப்பர்பெருமானது பதிகத்தில்" புத்தர் தேரர் அமண் கையர் புகழவே" எனக்குறித்தலால் அவர்தம் காலத்தில் புத்த, சமண சமயத்தவரும் இத்தலத்தில்வாழ்ந்துவந்ததும் அம்மதங்களைச் சார்ந்தோரும் சைவரோடு ஒற்றுமையாக வாழ்ந்ததும் புலனுகின்றன.

இத்தலத்தில் வந்து வழிபடுவோருக்கு விரைவில் திருமணம் நடைபெறும் எனநம்பிக்கை நிலவுகிறது. இவ்வூர் சம்பந்தர்காலத்தில் பெரியவீடுகள் மாடங்கள் நிறைந்த நல்லூராகவும் மக்கள்செழிப்புடன் வாழ்ந்து வந்ததும் தெரிகிறது. இவ்வூரைச்சுற்றி வாவிகள் (அன்று, விக்கிரமனுறு கிடையாது) வயல்கள், மயில்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்து மிகுந்த வளமைபொருந்தியதாக இருந்திருக்கின்றது. அப்பர் பெருமான்வாக்கிலிருந்து சமணரும் பௌத்தரும் சிவனடியாருடன் ஒற்றுமையாக அவ்வூரில் வாழ்ந்தமை அறியமுடிகின்றது. பிற ஊர் களின் பதிகங்களில் காணப்படும் சமணபுத்த கண்டனங்கள்கூட இத்தலப் பதிகங்களில் இல்லை.

இன்று உள்ள கோயிலின் முன்கோபுரம் ஐந்து நிலைகளோடு கூடிய சுமார் 75 அடி உயரம் உள்ளது. சமீபகாலத்தில் திருப்பணி செய்யப்பட்டு எந்தவிதமான கலையம்சமும் இன்றி வெறுமையாக உள்ளது. கோபுரத்தில் கல்வெட்டு ஏதுமில்லை, அதன் அமைதி யினைக்கொண்டு பார்த்தால் தஞ்சையில் நாயக்கர் ஆட்சிக்காலமான கி. பி. 16 ஆம் நூற்றுண்டில் கோயில் திருப்பணி செய்தகாலத்தில் கட்டப்பட்டிருக்கலாம். இக்கோபுரத்தினையும் அதனைச் சுற்றியமதிலும் உள்ளடக்கிய பழைய கோயில் உள்ளே உள்ளது. இதைப்போன்ற அமைப்பினைத் திருக்குறுக்கையின் அருகில் உள்ள வரகடைச் சிவன் கோயிலிலும் காணலாம். கோயிலுக்கு வடபுறம் திருக்குளம் உள்ளது.

முன்கோபுரத்தினை அடுத்த திறந்த முற்றத்தில் உயர்ந்த கொடி மரமேடையொன்று கொடிமரம் இன்றி உள்ளது. பலிபீடமும் நந்தி மண்டபமும் உயரமான அமைப்பிலுள்ளன. இங்குள்ள நந்தி சோழர் காலஅமைப்பினதாக இல்லாமல் புதுப்பாணியாகஉள்ளது. நந்தியின் முகவளைவுகள், கால்களின் வளைவுகள் முதலியவை சாதாரணவளைவுகள் இன்றி நேர்க்கோண வளைவுகளாக "ட" வளைவாகப் புதுமையாகக் காட்சி அளிக்கிறது.

இதனை அடுத்து சிறியகோபுரவாயில் உள்ளது. இக்கோபுரத்தில் தமிழும் கிரந்தமும் கலந்த கல்வெட்டு ஒன்றுள்ளது. இதன் எழுத் தமைதி கி. பி. 12ம் நூற்றுண்டினதாகத் தெரிகிறது, சுண்ணம்பினைச் சுத்தப்படுத்தினால் படிக்கலாம்.

இதனை அடுத்து மகாமண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் "மணக்கோலநாதர்" எழுந்தருளியிருக்கின்றார். ஐம்பொன் திரு மேனி. சுமார் ஒருமுழ உயரம் இருக்கும். உலகின் அழகெலாம் ஒருங்கு கூடிஞற்போல், "துன்னுவார் குழலாள் உமையொடும், பின்னுவார் சடைமேல் பிறை வைத்தவர், மன்னுவார் மணஞ்சேரி மருந்து" உள்ளது. இம்மணக்கோலத்தில் இறைவன் இறைவியின் கைப்பற்ற, இறைவி நாணமுடன் ஒல்கி, நிலமிசை நாட்டத்து நிற்கும் பணி கண் கொள்ளாக் காட்சியாகும். இங்கு இறைவனுக்குத் தினமும் திருமணக்கோலந்தான். எனவே வணங்குவோருக்கு மஞ்சள் சந்தனம் மலர் இவை தரப்படுகின்றன.

அருகில் ஆடவல்லான் திருமேனி உள்ளது. ஆடும்பொழுது வீசுவதாக அமைக்கப்படும் சடைவீச்சு இத்திருமேனியில் இல்லை. சடை முடிந்தகொண்டையாக உள்ளது. சோழர்கால ஆடவல்லா னுடைய திருமேனிகளில் சாதாரணமாகச் சடைவீச்சு அமைப்பது வழக்கம். இவ்விதம் சடைவீச்சு இன்றிப் பல்லவர் காலத்திலும்

அதையொட்டிய சோழர்காலத்திலும் அமைப்பது வழக்கம். இதே போன்ற ஆடவல்லான் திருமேனியினை இன்று தலைஞாயிறு என வழங்கும் திருக்கருப்பறியலூர்த் தலத்திலும் காணலாம். இரண்டும் ஒன்றுபோல் உள்ளது குறிப்பிடத்தக்கது.

சிற்பச்செல்வங்களாக அரியபல சிற்பங்கள் உள்ளன. இறைவன் திரு உண்ணாழிகை வாயிலில் ஓர் ஆள் உயரம் உள்ள இரு துவாரபாலகர்கள் சிலைகள் உள்ளன. இவற்றின் பாணி இராஜராஜசோழனுக்கும் முந்தியபாணியாகும். இருவரும் இரண்டுகைகளே உடையவர்கள் இராஜராஜனிலிருந்து நான்குகைகள் அமைப்பதுவழக்கம். மயிலாடுதுறைநாதர்கோயில், திருநின்றியூர்க்கோயில் காவலர்கள் போன்று அமைப்புஇருந்தாலும் அவர்களைவிட மிகவும்எளிமையாக உள்ளனர். அலங்காரங்கள் மிகக்குறைவு. தென்பால் உள்ளதில் வலக்கரம் சூசிஹஸ்தமாக(அச்சுறுத்தும்கை)வும் இடக்கை மழுவினைப்பிடித்தும் ஓர் காலைத் தரையில்ஊன்றியும் மறுகாலை மழுவில் ஊன்றியும்உள்ளன. வடபுறம் உள்ளசிலையின்ஓர்கை விஸ்வமயம்(வியப்புதெரிவிக்கும்கை) பாவனையாகவும், ஓர்காலை மழுவில் ஊன்றியும் காட்சி அளிக்கிறது. இரண்டிலும் கோரைப்பற்கள் இல்லை. (இராஜராஜனது பாணியில் கோரைப்பற்கள் உண்டு)

இறைவனது கருவறைச் சுற்றில் தென்பால் முதலில் சுமார் 2 அடி உயரம் உள்ள பிட்சாடனர் சிற்பம் உள்ளது சிறுபகுதி சுவருடன் ஒட்டியும் பெரும்பகுதி தனியாகவும் உள்ளது. இடமேற்கையில் திரிதண்டமும், வலமேற்கையில் டமருகமும், வலதுகை மானுக்கு அருத்தியும், இடதுகை கபாலம் ஏந்தியும் உள்ளன. காலில் உயரமான பாதக்குறடுகள் உள்ளன. பிட்சைப்பாத்திரம் ஏந்தும் குள்ளபூதம் இல்லை. பின்னமுற்றிருக்கலாம். குமிண் சிரிப்பு கொள்ளை கொள்ளும்வண்ணம் சிற்பி அமைத்துள்ளான். சிலை சிறிது பின்னமுற்றுள்ளது. அதனை அடுத்துப் பாலகணபதி என்ற விநாயகர் உள்ளார். உண்மையில் இளமையான உருவமைதி. இரண்டு கைகளே உள்ளன. இரண்டு கைகளே உள்ள விநாயகர் அமைதியினை 8-ம் நூற்றாண்டுச் சிற்பங்களிலே காணலாம். நீண்ட துதிக்கையுடன் - அலங்காரங்கள் இன்றி எளிமையான கோலத்துடன் உள்ளார்.

இதனை அடுத்து நடராஜர் உள்ளார். 2½ அடி உயரம் இருக்கும். அழகிய திருமேனி உடையவர். இவர் நாட்டியத்தினைக்கண்ட முனிவர் பதஞ்சலியும் ஆனந்தக்கூத்தாடுகின்றார். இத்திருமேனி மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்துள்ள தென்முகப் பரமாசாரியர் ஒருகாலை நேராக மடித்து முயலகன்மீது வைத்து ஊன்றி மறுகாலை மடித்துச் சுகாசனமிட்டு மிடுக்காய் அமர்ந்த கோலத்துடன்

மிக அழகுற விளங்குகின்றார். இதில் குறிப்பிடத்தகுந்தது இரண்டு கைகள் மட்டுமே உள்ளன. வலக்கை சின்முத்திரையும் இடக்கை சுவடியும்கொண்டு விளங்குகின்றன.

மேல்புறச் சுவரில் பிற்காலத்ததான லிங்கோத்பவர் உள்ளார். வடபுறம் உள்ள சுவரில் முதலாவது பிரமன்; இந்நான்முகன் திருமேனியும் பிற்காலத்ததே. இதனை அடுத்து ஆதிசேஷன் திருமேனியுள்ளது. தொடர்ந்து இராகுவின் திருமேனியுள்ளது. இரண்டும் பாம்பினது உடலும் மனிதமுகமும் கொண்டுள்ளன. அடுத்து, கொற்றவை உள்ளாள். சாந்தமான முகம். சோழர்காலப் பொக்கிஷம். ஒருகாலை ஊன்றி மறுகாலை தளர்த்தித் திரிபங்க நிலையில் ஒயிலாக உள்ளாள். வலக்கை அபயகரமாகவும், இடக்கை கடிகஸ்தமாகவும் விளங்குகின்றன.

இதனையடுத்து கங்காவிஸர்ஜனர் என்ற கங்காதரசிற்பம் உளது. எளிமையான கோலம். கங்கையினைத் தாங்குவதற்காக வலக்காலைக் குள்ளபூதத்தின் மீது ஊன்றி உள்ளார். வலமேற்கை ஒரு கற்றைச் சடையினைக் கங்கையினைத்தாங்கப் பிடித்துள்ளார். வணங்கியகரத்துடன் அதில்கங்கை இறங்கியுள்ளாள். அருகில் உமையன்னை இல்லை. இச்சிற்பம் மயிலாடுதுறை, சீகாழிச் சிற்பங்களைவிட நயம்குறைந்ததே.

இங்குள்ள பைரவமூர்த்தம் வேறு வெளிப்பிரதேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டதுபோலத் தோன்றுகிறது, பலகைச் சிற்பமாக உள்ளது. கோரைப்பற்கள் உள்ளன; பின்னால் ஒரேகல்லில் திருவாசியும் இணைத்துள்ளது. நாயின்தோற்றமும் புதுமையாக உள்ளது. முகத் தோற்றமும் பிறசிற்பங்களை ஒத்ததாக இல்லை.

இக்கோவிலில் திருவுண்ணாழிகைச் சுவர்களின் தூண்களில் போதிகைகளை நோக்கின் இது இராஜராஜசோழனின் காலத்துக்கு முற்பட்டது எனத் தெரிகிறது, ஏறத்தாழ 16ம் நூற்றாண்டில் இக்கோவிலில் நடைபெற்ற திருப்பணியின்போது கல்வெட்டுக்கள்யாவும் சிதைந்து மறைந்துபோயிருக்கவேண்டும். இன்று கருவறைச்சுவர்களில் கல்வெட்டு ஒன்றுமில்லை.

மண்ணுரு மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண்ணாரப் பாடவல்லார்க்கு இல்லை பாவமே.

ஆரோக்கியம்

திரு, நா. தனுக்கோடி

மருத்துவ அலுவலர், திருநெய்ப்பேர்

ஆரோக்கியம் அனைவர்க்கும் மிக இன்றியமையாதது. அதைக் காப்பாற்றுவதில் எப்பொழுதும் கண்ணுங்கருத்தாக இருக்கவேண்டும் என்று சொன்னவுடன் ஆரோக்கியம் என்றால் என்ன? என்று அறிய ஆவல் ஏற்படுகிறது.

நன்றாக உணவு உண்டும் நடமாடிக்கொண்டும் இருப்பவனை ஆரோக்கிய நிலையில் இருப்பவன் என்று கூறமுடியாது. ஆனால் மேலே கூறியவைகள் ஆரோக்கியத்திற்குள்ள இலட்சணங்களல்ல; இன்னும் சில முக்கிய குறிகள் இருக்கின்றன. அவைகளையும் சேர்த்துக்கொண்டுதான் ஆரோக்கியலட்சணம் சொல்லவேண்டும் என்பது நம் நாட்டுச் சித்தாந்தம்.

ஆரோக்கியம் என்ற சொல்லானது ரோகம் என்ற பதத்தின் எதிரிடைச் சொல்லாகக் கையாளப்படுகிறது. ஆகவே இப்பொழுது ரோகம் என்றால் என்ன என்று விளக்கவேண்டியிருக்கிறது. ரோகம், பிணி, வியாதி, நோய் முதலிய சொற்கள் பெரும்பாலும் ஒரே பொருளுடையவை.

பஞ்ச மகா பூதங்களால் அமைக்கப்பட்ட இச்சரீரம் பிருதிவி யென்னும் பூதமாகிய மண்ணால் உருவாகி, ஆகாயம் என்ற பூதத்திடை ஒடுங்கி, வாயு தேயு அப்பு என்னும் மூன்று பூதங்களால் இயக்கப்படுகிறது. மனத்தையும் சரீரத்தையும் தனியாகவோ, சேர்த்தோ வேதனையை அனுபவிக்கும்படிச் செய்பவைகள் ரோகங்கள் எனப்படும். இவ்விதம் ஞானேந்திரியங்களும், மனமும், ஆன்மாவும் தூய்மைபெற்றுத் தெளிவுற்றதாக இருக்கவேண்டும். இவையாவும் ஒருங்குபொருந்திய மனிதனே ஆரோக்கியம் உள்ளவன் என்று மறைகள் கூறுகின்றன.

நம் உடலில் வாயு, பித்தம், சிலேத்துமம் என்று மூன்று தோஷங்களும், பிருதிவி முதல் பூதாக்கினிகள் ஐந்தும், ரசம் ரத்தம் முதலிய தாதுக்களின் அக்கினிகள் ஏழும், ஜாடாராக்கினி ஒன்றும் ஆகப் பதின்மூன்றுவித அக்கினிகளும் எழுவகைத் தாதுக்களும்

இருக்கின்றன. மலம், மூத்திரம், வியர்வை முதலிய அழுக்குகளும் இருக்கின்றன. உடலினுறுப்புக்கள் முற்றிலும் இவ்வகுப்பிற்குள் அடங்கியவையே. இவைகளின் அளவில் ஏற்றம் இறக்கமின்றிச் சரியான அளவில் சமமாக இருக்கவேண்டும். எல்லாவற்றினுடைய இயற்கையான காரியங்களும் ஒழுங்காக நடைபெற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

தற்பொழுது நமது நாட்டிலும் மற்றைய நாடுகளிலும் வழங்கி வரும் சிகிச்சை முறைகளில் வியாதிகளின் கூறுபாடு காரணங்கள் இவற்றை ஆராய்ச்சிசெய்திருப்பதை மூன்றுவகையாகப் பிரிக்கலாம். சில முறைகளில் உடம்பில் வெளிப்படையாகத்தெரிகிற உடம்பின் வலி, மலஜலப்போக்கு. சீதோஷ்ண நிலை முதலியவற்றில் அதிக கவனம் செலுத்தி அவை எக்காரணம்பற்றி ஏற்பட்டிருந்தாலும் வெகுசீக்கிரத்தில் வேதனை இல்லாமல் இருக்க, தடுப்புகளை ஏற்படுத்துகிறார்கள். இதை ஆங்கிலத்தில் Symptomatology என்று கூறுவார்கள். சிலர் வியாதிகளால் தேகத்தின் உட்புற அங்கங்கள் எவ்வித மாறுதலடைகின்றன என்பதில் அதிகக் கவனம் செலுத்திவருகிறார்கள். இதை Pathology என்று மேல்நாட்டு மருத்துவ முறைகள் எடுத்து விளக்குகின்றன.

இவ்விரு கொள்கைகளும் பெரும்பாலும் வெளிச்சின்னங்களையும் அங்கங்களின் உள்மாறுபாடுகளையும்கொண்டே நோய்களை வகுத்திருக்கின்றனர். இதையொட்டியே சிகிச்சைகள் செய்துவருகின்றனர்.

மேற்கண்ட இருமுறையிலும், நோய்களின் மூலகாரணத்தைக் கண்டுபிடிப்பதில் (Etiology) முயற்சிகள் செய்தும் பெரும்பாலும் வெற்றி கிட்டவில்லை, வெற்றியடைந்ததாகக் கருதப்படும் முடிவுகளும் அனுமானங்களாதலால் அவை புதியவிஷயங்கள் கண்டு பிடிக்கும் சந்தர்ப்பத்தில் நாளுக்குநாள் மாறிக்கொண்டே இருக்கிறது. இதற்குக் காரணம் நவீன விஞ்ஞான உபகரணங்களைக் கொண்டு கண்டுபிடிக்கமுடியாத பலவித பொருள் மாறுபாடுகளும் சக்திமாறுபாடுகளும் இயக்கங்களும் நடைபெற்றுவருகின்றனஎன்பதே. நம் நாட்டு மருத்துவ முறைகளில் நோய்களின் மூலகாரணங்களிலேயே கவனம்செலுத்தி நேரில் கண்டறியமுடியாத பலவித உண்மைகளை முனிவர்களும் சித்தர்களும் தெளிவாகக் கண்டுபிடித்து விளக்கியுள்ளனர். நம் நாட்டு ஞானிகள் நோய்களின் மூலகாரணங்களைப்பற்றிக் கண்டுபிடித்திருக்கும் முடிவுகள், அனுமானங்களல்ல. யோகசக்தியால் நேரில்கண்டறிந்த அனுபவ உண்மைகள். இவை நாளுக்குநாள் மாறக்கூடியவைகளுமல்ல. நமது வேதமுறையில்மனோ வியாதிகள் என்றும், தேகவியாதிகள் என்றும் இருபிரிவுகளாகப் பிரித்

துள்ளார்கள். அவற்றிற்கான காரணங்களையும் நீக்குவதற்கான உபாயங்களையும் உபதேசித்துள்ளார்கள். அவைகளைச் சுருக்கமாகக்கூறுமிடத்து 1. ரஜோகுணம் 2. தமோகுணம் மனநோய்க்குக் காரணமாக உள்ளதென்றும், ஆத்மஞானம் தைரியம் ஸ்மிருதி (மறக்காமல் இருக்கப் பழகுதல்) சமாதி (மனத்தை ஒருநிலைப்படுத்தல்) முதலியவைகளால் நீக்கிக் கொள்ளவேண்டுமென்றும் கூறுகிறது.

தேக வியாதிகள் வெளிக்காரணங்களாலும் உண்டாகின்றன வெளிக்காரணங்களால் உண்டானாலும், பிறகு வாத, பித்த, கபங்களை மாறுபடச் செய்கின்றன என்றும், வாத பித்த சிலேத்துமத்தைச் சமப்படுத்தினால் குணப்படுத்தக்கூடும் என்றும் கூறுகிறது.

வாதம் பித்தம் கபம் என்றால் என்ன? எப்படி உண்டாகின்றன? என்ற விவரத்தை அறிதல்வேண்டும். நாம் உட்கொண்ட அன்ன பானாதிகள் ஆமாசயம் (இரைப்பை) சென்று ஜீரணமடையும் முதற் பகுதி மதுரபாகம். அதில் ஏற்படுவது சிலேத்துமம் (கபம்) என்று பெயர்.

பிறகு புளிப்பான அம்சங்கள் ஜீரணமாகி, சிறுகுடலுக்கு இறங்குகிறது. இந்த அம்லபாகத்தின் மேல் திரவப்பகுதிக்குப் பித்தம் என்று பெயர். நமது உணவில் கார்ப்பான பாகங்களும் கார்ப்பாக மாறக்கூடிய பாகங்களும் பக்குவமடைந்து சக்கையான மலம் மலதாரா என்னும் இடத்தில் (Transuerse colon) தங்குகிறது. நடுப்பாகத்தில் வாயு என்னும் அம்சமும் வெளியாகிறது.

உணவின் சாரமான ரசம் இரத்தமாக மாறும்போதும் கபம் உண்டாகிறது. இரத்தமானது மாமிசமாக மாறும்போதும் பித்தம் உண்டாகிறது. வாதம் கண்ணால்பார்க்கக்கூடியதல்ல. காற்று எப்படி ஸ்பரிச உணர்ச்சியால் அறியப்படுகிறதோ அப்படியே சரீரத்தில் உண்டாகும் வாதமும் அதுசெய்யும் வேலையினாலும் மற்ற குணங்களாலும் அறியப்படும். மனம், வாக்கு, காயம் முதலிய புலன்கள் இவற்றின் வேலைகள், மகிழ்ச்சி, சுவாசித்தல், தாதுக்களையும் பித்தம் கபம் இவைகளையும் உடம்பில் சமமாகப்பரவச் செய்தல்– கழிவுப் பொருட்களை வெளியேற்றுதல் முதலியன.

பித்தம் கண்ணால் பார்க்கக்கூடிய மஞ்சள் நிறமான திரவம். இதுவே அக்னி முதலிய சக்தியாகவும் வேலைசெய்கிறது. பசி, தாகம் உண்டாக்கல், உஷ்ணம் கொடுத்தல், ஆகாராதிகளைப் பக்குவம் செய்தல், உடம்பில் பளபளப்புத் தன்மையைக் கொடுத்தல் முதலியன.

கபம் கண்ணுல் பார்க்கக்கூடிய வெண்மை நிறமான பசை உள்ள திரவம். இது உடலுக்கு நைப்புகொடுத்தல், கனக்கச்செய்தல், கட்டு உண்டாக்கல், பலம் பொறுமை தைரியம் அவாவின்மை இவைகளைக் கொடுக்கிறது. அதிகாலையில் கபமும், வெய்யில் அதிகரிக்கும்போது பித்தமும், தணியும்போது வாதமும் மிகுதியாய் இருக்கும். அவ்விதமே இரவிலும் இருக்கும். உணவு உண்டவுடன் கபமும், ஜீரணம் நடக்கும் போது பித்தமும், ஜீரணம்முடிந்தபின் வாதமும் அதிகமாக இருக்கும். இவ்வாறு வாத பித்த சிலேத்துமத்தால் ஆன நமது உடம்பு ஒரு மாயா இயந்திரமாகும்.

உடற்பிணியை ஒழுக்கம், குருபக்தி, இறைப்பற்று ஒருங்கிணைந்த கற்றறிந்த வைத்தியனுலும், வாத பித்த சிலேத்தும தோஷங்களால் ஏற்படும் மலத்தை மூலிகைப் பிரயோகத்தாலும், ரச தாது ஔடதத் தாலும் எந்திரத்தாலும் நீக்கி, ஆரோக்கியமாய் வாழப் புள்ளிருக்கு வேளூரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு வைத்திய நாதப்பெருமானின் திருவருளால் செம்மை நலம் பலவும் எய்திச் சிறப்புறுவோமாக.

அன்னை அருள்மாலை

திருமுறைக்கலாநிதி,

வேளூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

மதுமலர்க் கொன்றையான் மகிழிடைச் சுரம்இமய
　　மடக்கொடி யம்மைவாஞோர்
　வந்துவை கலும்வழி படுந்திருக் கழுக்குன்றம்
　　வாழ்கின்ற பெண்ணினல்லாள்
சதுர்மறைகள் துதிசெயும் திருஅச் சிறுபாக்கத்
　　தலத்திற்சுந் தரநாயகி
　தக்கார் பரவும்வக் கரைவடி வாம்பிகை
　　தண்ணருள் தந்துநந்தம்
இதயத்தில் வளரர சிலிபெரிய நாயகி
　　இடும்பைமா காளநகரே
　இடமெனக் கொண்டுவா ழுங்குயில் மொழியம்மை
　　என்றுமணங் கமழுமெழிலார்
பதுமமல ருறைகலை மகள்திரு மகள்பணியும்
　　பண்ணிலுறு பெண்ணமுதமே
　பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
　　பணிவேற் கருள்அன்னையே. (35)

உலகில் எத்தனை நாடுகள்?

உலக நாடுகளின் எண்ணிக்கைபற்றி சுவாரஸ்யமான கருத்து வேறுபாடு தோன்றியுள்ளது. 'நாடு' என்பதற்கு அளிக்கப்படும் விளக்கம் காரணமாக எண்ணிக்கை மாறுபடுகிறது.

வாஷிங்டனில் நடைபெறும் சர்வதேச நிதி ஸ்தாபன நடப்பு கூட்டத்தில் 141 நாடுகள் கலந்து கொண்டன. ஆனால் ஜனத் தொகையை மதிப்பிட்டு, ஸ்தாபனம் உலகில் 212 நாடுகள் இருப்ப தாகக் கூறுகிறது. 'நாடு' என்பதன் இலக்கணம் என்ன என்பதில் தான் பல தரப்பட்ட நிலைகள் உள்ளன.

பிரான்ஸும், தாய்லாந்தும் 'நாடுகள்' என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் வாடிகனையும், நியூகலெடோனியாவையும் என்ன வென்று சொல்வது?

அமெரிக்கா 146 நாடுகளோடு ராஜீய உறவு கொண்டுள்ளதாக ஜனத்தொகைமதிப்பீட்டு ஸ்தாபன மாத இதழாகிய 'இண்டர்காமில் கூறப்பட்டுள்ளது. இதை அமெரிக்க அரசு வட்டாரமும் உறுதி செய்கிறது.

அமெரிக்கா 146 நாடுகளோடு ராஜீய உறவு வைத்திருப்பதால் உலகில் 146 நாடுகளே இருப்பதாக அர்த்தம் இல்லை. 146 சுதந் திர நாடுகள் உலகில் இருப்பதாக அமெரிக்க அரசு நில இயல் வல்லுநர் ஒருவரே கணக்கிட்டுச் சொல்கிறார்.

'நாடு' என்பதுபற்றி ஜனத்தொகை நிறுவனம்தரும் விளக்கம் விரிவானது

'பல வழிகளில் ஒரு தன்னிச்சையான நாடுபோல எந்த ஒரு நிலம் நடந்துகொண்டாலும் அது தனி நாடே'' என்பது அந்த ஸ்தாபனத்தின் விளக்கம்.

இதன்மூலம் உண்மையில் ஒரு ''காலனியாகிய'' 'ஹாங்காங்' கும், 'ஏகாதிபத்திய புரோகித அரசு' என்று கூறப்படும் வாடி கனும் கடல்கடந்த பிரெஞ்சு ஆதிக்கப் பகுதியாகிய நியூகலெடோனி யாவும் தனி நாடுகளாகக் கணக்காகிறது.

ஸ்பெயின் நாட்டு ஆதிக்கத்திலுள்ள 'கானரி தீவுகள்' தனி நாடாகக் கருதப்படவில்லை. இத்தனைக்கும் இத்தீவுகள் ஸ்பெயினிலிருந்து 1600 கி. மீ. தொலைவில் உள்ளன. ஆனால் பிரிட்டிஷ் ஆதிக்கப் பகுதிகளால் முற்றிலும் சூழப்பட்டுள்ள 'ஐல் ஆப் மேன்' என்றழைக்கபடும் தீவு தனிநாடாகக் கருதப்படுகிறது. காரணம் அது அதிக அளவில் தன்னாட்சி பெற்று விளங்குகிறது என்பதுதான்.

சட்டப்படி டென்மார்க்கின் ஒரு பகுதியாகிய 'கிரீன்லாந்து' தனி நாடு. அதே நேரத்தில் 'சிலி' யிலிருந்து வெகு தொலைவிலுள்ள 'ஈஸ்டர்தீவு' தனி நாடாகக் கருதப்படாமல் சிலியின் பகுதியாகவே கருதப்படுகிறது.

மனிதர்கள் வசிக்காத பகுதிகள் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. கரீபியன் கடலில் உள்ள 'நவாஸ்ஸா' தீவு இதற்கு உதாரணம். அமெரிக்காவுக்குச் சொந்தமான இத் தீவில் ஒரு 'கலங்கரை விளக்கம்' மட்டும்தான் உள்ளது. மனிதர்கள் வசிப்பதில்லை. போர்ச்சுகலுக்கு உரியதாய் இருந்தபோதிருந்தே கிழக்குதைமூர் தனிநாடாகவே கருதப்படுகிறது. ஆனால், இந்தோனேஷியா அதைத் தனக்கு உரியது என்று கூறுகிறது.

'திபேத்' நாடு 'எஸ்டோனியா' என்ற பெயரில் சீனாவுடன் இணைக்கப்பட்டுத் தனது தனித் தன்மையை இழந்துவிட்டது. அதே மாதிரிதான் 'லாட்வியா' வும், 'லித்துவேனியா' வும் ரஷியப்பகுதியாகிவிட்டன.

'பிட்சார்ன்' என்பது ஒரு தீவு. இதைச் 'சுதந்திரமற்ற நாடு' என்று ஜனத்தொகை ஸ்தாபனம் பட்டியலிட்டுள்ளது. இதன் ஜனத்தொகை எவ்வளவு தெரியுமா? வெறும் 70 பேர்தான்.

நன்றி — தினமணி, 6—10—80.

சகலகலாவல்லி மாலை

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே.

— ஸ்ரீ குமரகுருபரர்.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு, புரட்டாசித் திங்கள் 18-ஆம் நாள் (4—10—80) சனிக்கிழமை காலை, திருச்சிவபுரம் சிவபுரநாதர்கோயிலிலும், மாலை திருஅரிசிற்கரைப்புத்தூர் ஸ்ரீ சொர்ணபுரீசுவரர் ஆலயத்திலும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தலப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பெற்றன. தலப்பதிகநூல்கள் அன்பர்கட்கு வழங்கப்பட்டது காலை 10 மணியளவில் திருச்சிவபுரத் திருக்கோயிலில் சமயச்சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. சிவபுரம் திருப்பணிக் குழுத்தலைவர் திரு ஆ கிருஷ்ணபடையாட்சி வரவேற்புரை வழங்கினர் செந்தமிழ்ச் சிவநெறிச்செல்வர் திரு. வை. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் தலைமையில் 'அப்பூதியடிகள்' பற்றித் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர், திரு இரா. செல்வக்கணபதி, எம். ஏ அவர்களும், "திருக்கோயில் வழிபாடு" பற்றித் தருமையாதீன வேத சிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர், சிவஸ்ரீ எஸ். சுவாமிநாத சிவாசாரியார் அவர்களும் சொற்பொழிவாற்றினர். சிவபுரம் தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு. என், பன்னீர்செல்வம் அவர்கள் நன்றி கூறினர் மாலை மேணியளவில் திருஅரிசிற்கரைப்புத்தூர் ஆலயத்தில் திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டச் செயலர் திரு. எஸ். சுந்தரேசன் செட்டியார் அவர்கள் தலைமையில், "சோழர் கோயில் திருப்பணிகள்" என்ற தலைப்பில் மாயூரம் பள்ளித்துணை ஆய்வர் புலவர் திரு ந காளிங்கராஜ். எம். ஏ., பி. லிட். பி டி. அவர்களும், "இயற்பகைநாயனர்" என்றதலைப்பில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், புலவர் திரு மு சிவச்சந்திரன் எம் ஏ. அவர்களும் உரைநிகழ்த்தினர். வழிபாட்டின்போதும் சொற்பொழிவு களின் போதும் உள்ளூர்ப்பெருமக்கள் கலந்துகொண்டு, வழிபட்டும் கேட்டும் பயனுற்றனர்.

திருப்பறியலூரில் மின்விளக்கு ஏற்று விழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான - அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்ருகிய, பரசலூர் எனவழங்கும் திருப்பறியலூர் அருள்மிகு

வீரட்டேசுவர சுவாமி தேவஸ்தானத்தில், புரட்டாசித்திங்கள் 22-ம் நாள் (8—10—80) புதன்கிழமையன்று மாலை மின்விளக்கு ஏற்று விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுன்னர் மாயூரம் ஸ்ரீ குருஞான சம்பந்தர் பணிமன்றச் செயலர். திரு. வி. ஆறுமுகம் பிள்ளை I. A. S. (Retd) அவர்கள் மின்விளக்கை ஏற்றிவைத்துச்சிறப்புரை நிகழ்த்தினர் தருமை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றப் பொதுச்செயலர் திரு. வை. ஆறுமுகம்பிள்ளை அவர்களும், தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. அவர்களும் சொற்பொழிவாற்றினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை வழங்கியருள விழா இனிது நிறைவெய்தியது. விழாவை முன்னிட்டுச் சுவாமி அம்பாள் வீரபத்திரர் ஆகிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் பஞ்சமுகார்ச்சனை நவசக்தி அருச்சனை முதலியனவும் நிகழ்ந்தன. அன்பர்கள் பலரும் வந்திருந்து வழிபாடாற்றினர். அன்பர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அருட் பிரசாதம் வழங்கியருளினார்கள்,

தருமையாதீனத்திலும், திருத்துறையூரிலும்

ஸ்ரீ அருணந்திதேவர் குருபூஜை விழா

சந்தானகுரவருள் இரண்டாமவராகிய ஸ்ரீ அருணந்திதேவர் குருபூஜை விழா, புரட்டாசித் திங்கள் 20 ஆம் நாள் (6—10—80) திங்கட்கிழமை காலை தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சந்தானாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை 7 மணி அளவில் திருக்கோயிலில் வித்துவான் திரு. மு. ஆறுமுக தேசிகர், திரு, கா. ம. கண்ணப்பன் பி. லிட். ஆகியோர் அருணந்திதேவர் அருள் வரலாறு மற்றியும் அருள்நூல்கள் பற்றியும் விரிவுரையாற்றினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

திருத்துறையூரில் ஸ்ரீ சிஷ்டகுருநாததேசுவரர் ஆலயத்தில் சுவாமி, அம்பாள் ஆகியமூர்த்திகளுக்கும் ஸ்ரீ அருணந்திதேவ நாயனார் குருமூர்த்த ஆலயத்தில் ஸ்ரீ அருணந்திதேவருக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. மாலை 7 மணியளவில் 'மெய்கண்டார்' என்ற தலைப்பில் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர் திரு. சொ. முத்தையன் எம் ஏ. அவர்களும் 'அருணந்திதேவர்' என்ற தலைப்பில் திருவதிகைத்தமிழாசிரியர் வித்துவான் திரு. ந. சண்முக சுந்தரதேசிகர் அவர்களும், 'சிவஞானசித்தியார்' என்ற தலைப்பில் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் திரு மு சிவச்சந்திரன் எம். ஏ. அவர்களும் விரிவுரை நிகழ்த்தினர். அன்பர்

பலர் கலந்துகொண்டு குருவழிபாடுநிகழ்த்தியும் விரிவுரைகேட்டும் பயன்பெற்றனர்.

ஆதீனத் திருக்கோயில்களில் நிறைபணி விழா

நிறைபணி விழா புரட்டாசித் திங்கள் பௌர்ணமி நாளன்று இறைவனுக்குச் சிறந்த முறையில் நிகழ்த்தப் பெறுவது; சந்நிதியில் மலர்ப்பந்தலமைத்து, இளநீர், காய், கனி முதலியவைகளைத் தொங்கவிட்டு அழகுபெறச்செய்தும் இறைவனுக்கு அபிஷேக அலங்காரங்கள் நிறைவுறச் செய்தும் கொண்டாடப் பெறுவது. திருமால் இறைவனைப் பூசித்து அருள்பெற்ற இந்நாளில் திருமால் ஆணைப்படி தேவர்கள் பூசித்ததாகச் சிவரகசியம் கூறுகிறது. திருத்தருமையாதீன அருளாட்சியில் விளங்கித்திகழும் சீர்காழி, வைத்தீஸ்வரன்கோயில், திருக்கடவூர், திருபுவனம், முதலிய ஆலயங்களிலும் தருமைத்திருக்கோயில்களிலும் இவ்விழா 24—9—80 அன்று மிகச்சிறப்பான முறையில் நிகழ்ந்தது அன்பர்கள் பலர் இறைவனை வழிபட்டு இன்புற்றனர்.

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஆண்டுச் சந்தா	(உள்நாடு)	...	ரூ.	9—00
ஆண்டுச் சந்தா	(சிலோன்)	...	ரூ.	11—00
ஆண்டுச் சந்தா	(வெளிநாடு)	...	ரூ.	17—00
ஆயுள் சந்தா	(உள்நாடு)	...	ரூ	100—00
ஆயுள் சந்தா	(வெளிநாடு)	...	ரூ.	125—00

செயலாளர், ஞானசம்பந்தம் செயலகம் தருமபுரம், மாயூரம் 609 001
தஞ்சை மாவட்டம்.

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

ரௌத்திரி ஞு ஐப்பசி மீ 1உ முதல் 30உ முடிய.

(17—10—80 முதல் 15—11—80 முடிய)

ஸ்ரீரௌத்திரி ஞு ஐப்பசி மீ 1உ சுக்கிரவாரம் உத்திராட நக்ஷத்திரம் பவகரணம் கூடியகாலத்தில் சூரிய உதயம் முதல் 6 நாழிகை 36 விஞடிக்கு விருச்சிக லக்னத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு கன்னியாராசியிலிருந்து துலா ராசி சங்கிரமணமாக ஐப்பசிமாதப்பிரவேசம் செய்தருளுகிருர். அன்று விஷு புண்ணியகாலமாகும். மாதம் பூராவும் பிராதகாலத்தில் புண்ணிய தீர்த்தத்தில் துலா முழுக்கு விசேஷம். சங்கிரமகாலகிரகஸ்திதியினுல் லோகமெங்கும் நல்ல மழைபெய்து பயிர்கள் செழித்து விளைந்துவரும். உலகில் அறநெறியாளர்களால் சிவதர்மங்கள் வெகுவாக நடந்துகொண்டிருக்கும். ஆன்மகோடிகளுக்குச் சர்வேஸ்வரனின் நித்தியபரிபாலிப்பு நிறைவேறும்பொருட்டு ஈஸ்வரனருளினுல் தேசங்களில் நியமனமாகி வந்துள்ள ஜனுதிபதிகள் மந்திரிகள் தர்மநெறியில் நீதிபரிபாலனம் செய்து பிரஜைகளை இரட்சிப்பார்கள்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரியபீடங்களில் இறைவன் கட்டளையின்படி வந்துள்ள சிவஞான குருமகான்கள் லோகத்திற்கு நீதி நேர்மை சிவாசாரத்தின் உயர்வு ஆகிய நல்வழிகளையும் திருவாய் மலர்ந்து மொழிந்து அருள்வார்கள். சிஷ்ய கோடிகளுக்கு சிவபூஜா விதிகளைப்போதித்து, அவர்கள் அனுஷ்டித்துஉயர்வடைய ஆசியருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூஜைகள் சிறப்பாக நடைபெறும். லோக பிரஜைகள் சீரியவழியில் தெய்வபக்தியுடன் க்ஷேமமாக வாழ்வார்கள்.

ஸ்கந்தசஷ்டி விரதம்

குறிப்பு :— இந்த விரதம் சாந்திரமான கார்த்தீக சுத்தப்பிரதமை தொடங்கி அதாவது சௌரமானத்தில் ஐப்பசிமாத பூர்வபட்சம்

பிரதமை தொடங்கி சஷ்டிவரையில் ஆறுதினமும் உபவாசமாய் இருந்து அனுஷ்டிக்கப்படுவதாகும். விரதம் அனுஷ்டிப்போர் ஆறு தினமும் இரண்டு காலங்களிலும் நித்தியானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு ஸ்கந்த சுவாமியை ஆவாகித்துப் பூஜிக்கவேண்டும். யந்திரம், அட்சரம், மந்திர உச்சாடனம் ஆகியவற்றை குருமூலமாக அறிந்து விதிப்படி ஜெபம் செய்து முடிக்கவேண்டும்.

இவ்விரதம் அனுஷ்டிப்பவர்களுக்குச் சகலபாவங்களும் நீங்கும். வியாதிகள் தீரும். அஷ்டைஸ்வரியமும் சகலசம்பத்தும் உண்டாகும். எண்ணிய நற்கோரிக்கைகளெல்லாம் சித்தமாய் நிறைவேறும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼
(சு. சே. சோ. லா. - வி. லு. லே. லோ. - அ.)

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில்பணவரவும் தானியநிறைவும் திருப்தியளிக்கும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். வித்தியா வியாபாராதி கலைத் துறைகளில் விசேஷபலன்வரும் இயந்திரசாதனங்களில் அபிவிருத்தி பயன்காணும். எல்லாக்காரியங்களும் துரிதமாக நடைபெற்றுவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும் ஐப்பசிமீ 5, 6 தேதிகளில் நல்லவிதத்தில் செலவு செய்யும். 24, 25 தேதிகளில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

2. ரிஷபம் :– கார்த்திகை ¾ - உரோகிணி – மிருகசீர்ஷம் ½
(இ. ஊ. ஏ. - ஓ. வ. வி. வு - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் நற்பலன்தரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல பணவரவுகளை ஏற்படுத்தும். சகோதரருக்கு நல்லஸ்திதி ஏற்படும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் பிரயோஜனம் மிகுந்துவரும். வாகனசுகம் சாதாரணமாக இருந்துவரும். தாரபுத்திரர் களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஐப்பசிமீ 8 9 தேதிகளில் நெருக்கடியாகச் செலவு செய்யும். 25உ 56நாழிகை 57விநாடி முதல் 28உ 15 நாழிகை 56 விநாடிவரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾
(கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் செந்நெல் பிராப்தியில் நல்லநிலைமையை ஏற்படுத்தும். சகோதரர் சௌக்கியம் நன்றாக இருந்துவரும்.

எழுத்துமூல விஷயங்களில் சிக்கலாக இருந்து சரிபடும். ஞாயிற்றுக் கிழமை சூரியார்ச்சனை செய்ய நன்மைகள் பல ஏற்படும். தாரபுத்திரர் களுக்குச் சௌக்கியபலன் தரும். ஐப்பசி மீ 10, 11 தேதிகளில் அதிகச் செலவை ஏற்படுத்தும். 28, 26, 30 தேதிகள் சந்திராஷ் டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.
(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். திட்டமிட்டுள்ளபடி காரியங்கள் நன்கு நடைபெறும். நூதனவஸ்துவின் பிராப்தியையளிக் கும் வாசஸ்தலத்தில் ஓர் ஞாபகார்த்தச்சின்னம் அமைத்தலாகும். ஸ்ரீ விக்னேஸ்வரரைப் பூசிக்க மனஅலைவு நின்று அமைதிதரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஐப்பசி மீ 3உ 9 நாழிகை 4 விஞடி முதல் 5 உ 17 நாழிகை 47 விஞ'டி வரையில் சந்திராஷ்டமம். 12, 13 தேதிகளில் விசேஷ செலவினை ஏற்படுத்தும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் ¼
(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானம் நல்லவிதமாகவந்துசேரும். சகோதரரின் விசுவாசம் ஒத்துழைப்பு திருப்தியளிக்கும். வித்தியாவியாபாராதி கலைதுறைகளில் கண்யஸ்திதியை ஏற்படுத்திக்கொண்டிருக்கும். புத்திரருக்கு நல்லன ஏற்படும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும் ஐப்பசி மீ 14, 15 தேதிகளில் அவசிய செலவினங்களை ஏற்படுத்தும். 5உ 17 நாழிகை 47 விஞடிமுதல் 7 உ 23 நாழிகை 26 விஞடிவரையில் சந்திராஷ் டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½
(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்யாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். குடும்பத் தில் நல்ல காரியங்களில் செலவும்செய்யும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் புகழ் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஐப்பசி மீ 7உ 23 நாழிகை 26 விஞடிமுதல் 9 உ 30 நாழிகை 7 விஞடிவரையில் சந்திராஷ்டமம். 16, 17 தேதி களில்முக்கியமானசெலவினைச்செய்யும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$
(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்தும். குடும்பாபி விருத்தியில் நல்ல பணவருமானம் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு நல்லன ஏற்படும். குடும்பத்தில் சர்ச்சைகள் ஒருபுறம் ஏற்படினும் மன உறுதியாகக்காரியங்களை நடத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். ஐப்பசி மீ 10, 11 தேதிகளில் சந்திராஷ்டமம். 19, 20 தேதிகளில் விசேஷமான செலவை ஏற்படுத்தும். புதன் வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.
(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் பலவிதத்தில் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்குஓர் உயர்வு ஏற்படும். வீடுவாகனபிராப்தியில் சௌகரியம் மேலிடும். மாதக்கடைசியில் பிறரிடம் உரையாடலில் அவசரமின்றி நிதானத்துடன் பேசுதல் வேண்டும். தாரபுத்திரர்களில் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஐப்பசி மீ 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். 21, 22 தேதிகளில் முக்கியமான செலவு ஆகும். வெள்ளி சனி சுபமாகும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$
(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானம் கணிசமாகவரும். சகோதரருக்குச் சௌக்கிய பலன் தரும். வித்துவத்துவத்தில் மேன்மை ஸ்திதியை ஏற்படுத்தும். பெற்ருேர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். பந்து அம்மான்கள் பிரீதியாய்இருப்பர். புத்திரனுக்கு நல்லஸ்திதி ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். 14, 15 தேதிகள்சந்திராஷ்டமம். 24, 25 தேதிகளில் புத்திரர் சகோதர சம்பந்தமாகச் செலவுசெய்யும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$
(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். குடும்பாவிருத்தியில் தனுதிசௌரியங்களில் நல்லநிலைமையை ஏற்படுத்தும், சகோதரர் விசுவாசம்மேலிடும். கட்டடபிராப்தி வாகனபிராப்திகளில் சௌகரியம்

மிகும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருகஇருந்துவரும், ஐப்பசிமீ 16உ 9 நாழிகை 38 விஞடி முதல் 18உ 34 நாழிகை 20 விஞடிவரையில் சந்திராஷ்டமம், 26 27 தேதிகளில் அவசிய செலவைச் செய்யும். செவ்வாய் புதன் சுபமாகும்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

(கு. கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞகநடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானத்தை ஏற்படுத்திவரும். சகோதரர் சகோதரிகளின் நலம் நன்ருகஇருந்துவரும். வாகனபிராப்தியில் ஓர்பரிவர்த்தனை ஏற்படும். எழுத்துமூல காரியங்களில் வித்துவத்துவத்தில் நல்லன ஏற்பட்டுவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். ஐப்பசிமீ 1,2,29,30 தேதிகளில் முக்கியமானவற்றில் முதலீடு ஆகும். 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம் வியாழன் வெள்ளி சுபமாகும்.

12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$– உத்திரட்டாதி – ரேவதி.

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞகநடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணம்வரவும் செலவும் சரிசமஞக இருந்துவரும். சகோதரருக்கு அற்பர்களால் சிறுசங்கடம்வந்து நீங்கும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் விசேஷபலன் தரும். அரசாங்கநன்மையைத்தரும். வீடு வாகன பிராப்தியில் மாறுதல்கள் ஏற்படும். தாரபுத்திரர்களின்சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஐப்பசிமீ 3, 4 தேதிகளில் அதிகச்செலவினங்களை ஏற்படுத்தும். 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

சகலகலாவல்லி மாலை

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்; வடநூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச்செல்வமும் தொண்டர்செந் நாவில்நின்று
காக்குங் கருணைக் கடலே! சகல கலாவல்லியே! 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகம் என்
நெஞ்சத் தடத்தல ராததென் னே? நெடுந் தாட்கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்த்தோன்செந் நாவும் அகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே! 5

— ஸ்ரீகுமரகுருபரர்.

ஐப்பசிமாதச் சிறப்பு நாட்கள்

17—10—80 வெள்ளி, துலாவிஷு புண்ணியகாலம். மாயூரம் வள்ளலார் கோயில், திருவையாறு ஆகிய திருத்தலங்களில் துலாவிஷு தீர்த்தம்.

18—10—80 சனி, மகாநவமி. சரஸ்வதிபூசை. ஆயுதபூசை. தருமையாதீன ஸ்ரீ மகாலட்சுமிதுர்க்காம்பிகாசந்நிதியில் நடைபெறும் சதசண்டியக்ஞ மகாபூர்ணாகுதி.

19—10—80 ஞாயிறு, விஜயதசமி. தருமை ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காம்பிகைக்குச் சதசண்டியக்ஞ கலசாபிஷேகம். விசேஷபூஜை.

21—10—80 செவ்வாய், பிரதோஷம்.

23—10—80 வியாழன். பௌர்ணமி விரத பூஜை. அன்னாபிஷேகம். திருமூல நாயனார் குருபூஜை. தருமையாதீனம் 7 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள், 9 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

24—10—80 வெள்ளி, நின்றசீர்நெடுமாற நாயனார் குருபூஜை

25—10—80 சனி, கிருத்திகை விரதம். தருமை ஸ்ரீ சண்முகர் கிருத்திகை, இடங்கழி நாயனார் குருபூஜை.

26—10—80 ஞாயிறு, வேளூர் கிருத்திகை, சங்கடஹரசதுர்த்தி.

27—10—80 திங்கள், தருமையாதீனம் 22 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

30—10—80 வியாழன், சத்தி நாயனார் குருபூஜை.

31—10—80 வெள்ளி, தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருபூஜை. காளாஷ்டமி ஆயில்யவிழா.

2—11—80 ஞாயிறு, தருமையாதீனம் 10 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

3—11—80 திங்கள், திருக்கயிலாயபரம்பரைத்தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடம் அமர்ந்தநாள்.

5—11—80 புதன், அதிகாலை நரக சதுர்த்தசி ஸ்நானம்.

6—11—80 வியாழன், தீபாவளிப் பண்டிகை. கேதார கௌரி விரதம். மாயூரம் வள்ளலார்கோயில் முதலிய தலங்களில் துலா உற்சவ ஆரம்பம். மாத சிவராத்திரி.

7—11—80 வெள்ளி, சர்வ அமாவாசை. மாயூரம் - வள்ளலார்கோயில் ஸ்ரீமேதாதட்சிணாமூர்த்தி கங்காதேவியுடன் தீர்த்தம் கொடுத்தருளல். ஸ்ரீ மெய்கண்டார் குருபூஜை. பெண்ணாகடத்தில் ஸ்ரீ மெய்கண்டாருக்கு விசேஷ அபிஷேக ஆராதனை.

8—11—80 சனி, வேளூர், மாயூரம்-குமரக்கட்டளை, சீகாழி, திருச்செந்தூர், பழனி முதலிய தலங்களில் கந்தசஷ்டி உத்ஸவாரம்பம்.

9—11—80 ஞாயிறு, பூசலார் நாயனார் குருபூஜை.

11—11—80 செவ்வாய், திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் குருபூஜை.

13—11—80 வியாழன், கந்தசஷ்டி சூரசம்காரம். வேளூர், மாயூரம் - குமரக்கட்டளை, திருச்செந்தூர், பழனி முதலிய தலங்களில் சூரசம்காரம். திருவண்ணாமலை தீப உத்ஸவ ஆரம்பம்.

14—11—80 வெள்ளி. வேளூர், கந்தசஷ்டி தீர்த்தம்.

15—11—80 சனி, வேளூர் தெய்வயானை திருக்கல்யாணம். கடைமுக ஸ்நானம். மாயூரம், வள்ளலார்கோயில், திருவையாறு, முதலிய தலங்களில் காவிரியில் கடைமுக தீர்த்தம்.

GNANASAMBANDAM Regd. No. Tn/NM2

உ

குருபாதம்

தருமையில்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருபூஜை விழா

31—10—1980

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் 25 ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து 26½ ஆண்டுகள் அருளாட்சி செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தருமையாதீன வரலாற்றில் பொற்காலங் கண்டவர்கள். ஆதீனத்திற்குட்பட்ட இருபத்தேழு திருக்கோயில்களையும்புதுப்பித்து குடமுழுக்குச்செய்வித்தவர்கள். இமயம் முதல் குமரிவரை அவர்கள் தரிசிக்காத தலங்களே இல்லை என்னும் அளவிற்கு. தலயாத்திரை செய்தருளியவர்கள். எல்லாவற்றிற்கும் சிகரமாகக் கயிலைமாமலையைத் திருவருள் வலத்தால் தரிசித்த சிறப்புடையவர்கள். அச்சிறப்புக் காரணமாகப் பக்தர்களால் கனகாபிஷேகம் செய்விக்கப்பெற்றுக் "கயிலைக் குருமணி" எனக் கனிவோடு அழைக்கப்பெற்றவர்கள். இக்குருமூர்த்திகளுக்குத் தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் ஸ்ரீ காசிவிசுவநாதர் திருக்கோயில் விமானவடிவில் ஆலயம் அமைக்கப்பெற்று நித்தியநைமித்திக வழிபாடுகள் நிகழ்ந்துவருகின்றன.

இக்குருமூர்த்திகளது ஒன்பதாவது ஆண்டுக் குருபூஜை நன்னாளாகிய, நிகழும் ரௌத்திரி ஆண்டு ஐப்பசித்திங்கள் 15 ஆம்நாள் (31—10—80) வெள்ளிக்கிழமை, குருமூர்த்த ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகள், திருமுறைப் பாராயணம், சொற்பொழிவுகள் முதலியன நிகழும்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அறக்கட்டளையின் சார்பில் கயிலைக்குருமணி முத்திப்பேறெய்திய ஸ்ரீகாசி ஸ்ரீ குமாரசாமி மடத்தில் குருமணியின் திருவுருவப்படத்திற்குச் சிறப்பு வழிபாடும் ஸ்ரீ விசாலாட்சியம்மை, ஸ்ரீ விசுவநாதர், ஸ்ரீ அன்னபூரணி, ஸ்ரீ கேதாரநாதர் முதலிய மூர்த்திகளுக்கு விசேட அபிடேக ஆராதனைகளும், நண்பகல் மாகேசுவரபூசையும், சாதுக்களுக்குப் பண்டாரமும் நிகழும்.

மாயூரம் தெய்வத் தமிழ் மன்றத்தினரால், ஏ வி. சி. பழைய திருமண மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருபூசை நினைவு விழா, சிறப்புச் சொற்பொழிவு[illegible] நிகழ்த்தப்பெறும்.

அன்பர்கள் தரிசித்துக் குருவருள் பெற்று உய்வார்களாக.

Printed & Published by V. Ramaiah Pillai Manager Dharmapuram at the Gnanasambandam Press Dharmapuram Mayuram 10—10—80